481

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

481/3-56
15-7
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 JUL 1956

நித்யகல்யாணர்

JL
210730

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	168
2.	மங்கை நல்லார் மனோபாவத்தில் விஷ்ணுசித்தன் [ஸ்ரீ. உப' ஈ. தே. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	172
3.	தேச உலக ரக்ஷை [ஸ்ரீ.உப. வித்வான், திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி, M.O.L. திருப்பதி.]	175
4.	மஹாவீரவைபவம் [ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்ய ஸ்வாமி. வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	179
5.	திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம் [ஸ்ரீ. உப. ஒரகடம், கோ. ஸுதர்சனாசார்ய ஸ்வாமி. அவளூர்.]	183
6.	சௌசம் [ஸ்ரீ. உப. வைத்யரத்னம், M. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, கீழ்ப்பாக்கம், சென்னை.]	185
7.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	191
8.	செய்திகள்	196
9.	பக்ஷிண்யாசௌச நிர்ணயம்	197
10.	பஞ்சாங்கஸங்க்ரஹம்	198

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ௵ ஆடி ௴ { ஸஞ்சிகை 7

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

210730

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

நவீனப் போக்கு

உலகை ஸ்ருஷ்டி செய்தவன், அதை நிலை நிறுத்துவதற்காக பல ஸாதனங்களையுமமைத்துக் கொடுத்தான். அவைகளில் முக்கியமானவை நீரும் காற்றும். ஜீவராசிகளின் இவ்வுலகவாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதவைகள் இவைகள். இறைவனின் அருளால் இவைகள் மிகவும் பரிசுத்தமான நிலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அம்மாதிரி நிலையிலேயே இவைகள் இருந்தால் ஜீவராசிகளுக்கு மிகவும் உபயோகமுள்ளவைகளாக ஆகும். ஆனால் உலகப்போக்கு அப்படியே நிலைத்திருப்பதில்லை.

நமது அநுபவத்தில் இயற்கைஸாதனமான ஜலம் எக்காலத்திலும், எல்லாவிடங்களிலும் ஒரேவிதமான முறையில் காணப்படுவதில்லை. கங்காஜலத்தை ஓர் சிறிய பாத்திரத்தில் நிரப்பி, அப்பாத்திரத்தை நன்றாக மூடி காற்று, வெளிச்சம் அதில் படாதமுறையில் பல நாட்கள் வைத்திருந்தாலும், அது கெடுவதில்லை. ஆனால் இதே முறையை மற்ற நதிகளிலோ, இதரவிடங்களிலோ கிடைக்கும் ஜலத்தின் விஷயத்தில் பின்பற்றினால் நமக்குக் கிடைக்கும் பலம் வித்யாஸமாகவிருக்கிறது. ஜலம் துர்க்கந்தத்துடன், உபயோகமற்றதாகி விடுகிறது கங்காஜலத்திற்குமட்டில் என்ன அவ்விதமான உயர்ந்த குணம், அதை எக்காலத்திலும் உயர்ந்ததாகவே இருக்கும்படிச் செய்ய உதவுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்குமவர்கள், பகுத்தறிவுக்கு உகந்ததான ஓர் காரணத்தைக் கூறுகிறார்கள். அதாவது இமயமலைச் சாரலில் உற்பத்தியாகும் இம்மஹாநதி அங்குள்ள சில ஸாதனங்களினாலும், அதாவது உத்பத்தி ஸ்தானத்தின் கௌரவத்தினாலும், பிறகு வழிநடுவே ஏற்படும் சில இயற்கை ஸாதனங்களின் சேர்க்கையினாலும் எக்காலத்திலும் உயர்ந்த குணமுள்ளதாகவே இருக்கிறது. உலோக வஸ்துக்களில் உயர்ந்த தாமிரம் மற்றும் மூலிகைகள் இருக்கக்கூடிய ப்ரதேசங்களின் வழியாக கங்காஜலம் ப்ரவஹித்து வருவதால் அந்த வஸ்துக்களின் சேர்க்கை விசேஷத்தால் நற்குணங்களோடு எக்காலத்திலும் இருக்கிறது. இமயமலையைத் தாண்டி சமவெளியில் ப்ரவஹிக்கும் காலத்தில் பல நவீன நகரங்களின் வழியாக ஓடும் காலங்களில், அவ்விடங்களில் உள்ள அசுத்த ஜலத்தை இம்மஹாநதியில் சேர்த்தாலும்கூட இந்நதியின் ஜலம் கெடுவதில்லை. காசி க்ஷேத்திரத்தில் பல சவங்களைக்கூட இந்நதியில் மிதக்கவிட்டுவிடுவதாகவும் அங்கு சென்றவர்கள் கூறுகிறார்கள். அப்படியிருந்தும் இம்மஹாநதியின் ஜலம் ஸ்வபாவமான, தனக்கென்று ஏற்பட்ட நற்குணத்தை இழப்பது கிடையாது. உற்பத்தி காரணமாகவும், இயற்கை சூழ்நிலைகாரணமாகவும் இந்த இயற்கைஸாதனத்தின் (கங்காஜலத்தின்) தன்மை மாறுவதில்லையல்லவா. மற்றவிடங்களிலுள்ள ஜலம் அம்மாதிரியான தன்மையை அடைவதில்லை. இவ்வளவு உயர்ந்த குணமில்லாவிடினும், காவேரி, கோதாவரி போன்ற புண்யநதிகளின் ஜலமும் உயர்ந்ததாகவே கருத இடமிருக்கிறது. அதற்குக் காரணமும் அவைகளின் உத்பத்தி ஸ்தானமாகிய மேற்குத் தொடர்ச்சி மலையாகும். ஸாமாந்ய சிறிய நதிகளோ, மற்றைய ஜலாசயங்களோ சற்றுக்குறைவான குணத்தோடு கூடியவைகள்

தான். அவைகளைக் காட்டிலும் தாழ்ந்த ஜலத் தேக்கங்களையும் நாம் காண்கிறோம்.

இதேபோல் காற்றிலும் சுத்தக் காற்று, அசுத்தக் காற்று என நவீன மனப்பான்மையினர் (விஞ்ஞானிகள்கூட) கூறுவதை நாம் கேட்கிறோம். சுத்தக் காற்று உள்ள சில மலைச்சாரல்களிலும் அதன் ஸமீபத்திலுள்ள நகரங்களிலும்கூட நாம் வஸித்தால், ஆரோக்யத்திற்கு உகந்தது எனவும் கூறுகிறார்கள். சில விஷபாதிகளைப் போக்கவும் வராமல் தடுக்கவும் இம்மாதிரியான இடங்களில் வஸித்தல் மிகவும் நல்லது என அநுபவத்தின்மூலம் கூறுகிறார்கள்.

இப்படி சுத்த ஜலம், சுத்தக் காற்று இவைகள் சூழ்நிலையினால்கூட கெடாமல் இருப்பதும் சூழ்நிலையினால் கெடுவதும் நமது அநுபவத்தில் உள்ள விஷயங்கள்.

இயற்கை குணங்கள் இம்மாதிரியிருக்க, மனிதன் தன் அகந்தையினால் இயற்கைகுணங்களை வென்றுவிட முயற்சிக்கிறான். முயற்சியில் ஏதோ பெரிய நற்பலனைக் காணுவதாகப் ப்ரமிக்கிறான். முடிவில் அதில் பெருந்தோல்வியையே அடைகிறான். அப்படியிருந்தும் வீண்முயற்சிகளை அவன் விடுவதில்லை. இதற்குக் காரணம்தான் என்ன? நமது அறிவிற்கு எட்டாதது ஒன்றுதான். வேறு ஒருவிதமான காரணமும் சொல்லமுடியாவிடில் நமது அறிவுக்கு எட்டாததுதானே. நவீன மனப்பான்மையினால் விளக்கமுடியாதவைகள் ஆயினும் உண்மையான காரணத்தை முன்னோர்கள், முக்காலமும் அறிபவர்கள், நன்குணர்ந்து கூறியுள்ளார்கள் என்றால் அதை நாம் ஒப்புக்கொள்ள ஏன் தயங்கவேண்டும். ஒப்புக்கொள்ளுபவர்களையும் நாம் ஏன் பரிஹஸிக்கவேண்டும்? இதுதான் நவீன மனப்பான்மை.

விஞ்ஞானமுறையில் உலகத்தை வென்றுவிட ஆசைப்படும் ராஜீயவாதிகள் ஜலவாயு குண்டு அணுகுண்டு இவைகளை உற்பத்தி செய்து, பரிசோதித்துப் பார்க்கும் முறைகளினால் இயற்கை ஸாதனங்களான ஜலமும், காற்றும் கெடுவதாக, நவீன விஞ்ஞானிகளே கூறுவதை நாம் தினமும் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறோம். நற்குணங்களைக் கெடுக்கின்றன, இம்மாதிரிப் பரிசோதனைகளை நிறுத்துங்களென பல பெரியோர்கள் கூறுவதைக் கேட்டும் அரசியல் வாதிகள் நிறுத்துகிறார்களில்லை. ஏன்? இவர்களுடைய நல்லறிவு வளர்ச்சியைத் தடைசெய்யும் ஆசாபாசங்களேதான் இவர்களைத் தூண்டிவிட்டு மேன்மேலும் இம்மாதிரியான தீய சக்திகளை விளைவிக்கும் இயக்கங்களில் ஈடுபடும்படி செய்கின்றன.

நமது ஸித்தாந்தத்தில் மூன்று உண்மைத் தத்துவங்கள் உண்டு சித், அசித், ஈச்வரன் இவைகளில் மூன்றாவது தத்துவமாகிய ஈச்வரன் ஸகல உலகத்திற்கும் நியந்தா. அதாவது நடத்திக் கொடுக்கும் யஜமானன். இவனால் உண்டாக்கப்படுவது (ஸ்ருஷ்டிக்கப்படுவது) தான் ஸகலவிதமான உலகபரிணாமும் (மாறுதலும்). இப்படி ஏற்படுவதுதான் சித் என்ற அசைப் பொருளும், அசித் என்ற அசையாப் பொருளும்.

ப்ரளயகாலத்தில் (உலகத்தின் நாசகாலத்தில்) பகவானுடைய ஸ்வரூபத்துடன் இணைகின்றனவையும், பிறகு பகவானால் பல ரூபங்களில் அமைக்கப்படுகிறதுகளுமான ஜீவன்கள் தங்களுடைய செயல்களால் பலவித பலன்களை அடையவேண்டியவைகளாகின்றன. இச்செயல்கள் என்கிற இக்கர்மாக்களுக்கு அநுகுணமாகவே இவைகளுக்கு உலகில் உற்பத்தியும், போக்கும் அமைகின்றன. ஆகவேதான் உலகில் உள்ளவரை நாம் எல்லோரும் நமது உற்பத்திக்கும், வாழ்க்கைக்கும் உகந்தபடி நடந்துகொள்ளவேண்டும் என நமது முன்னோர்கள் கூறிவந்தார்கள். பலர் இப்பொழுதும் கூறிவருகிறார்கள்.

இயற்கைக்கு விரோதமான செயலில் ஈடுபடும் விஞ்ஞானிகளும் தோல்வியடைகிறார்கள் என நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்த்துக்கொண்டே இருக்கும்பொழுதுகூட இயற்கையான ஏற்பாடுகளில் நமக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு

என்ன காரணம்? நவீன சூழ்நிலையில் மட்டில் நமக்கு ஏற்பட்டுள்ள மயக்கம் ஒன்றேதான்.

அசித் வஸ்துவாகிய கங்காஜலத்தில் உற்பத்தி, அபிவ்ருத்தி இவைகளினால் ஏற்பட்டுள்ள நற்குணங்களை நாம் அநுபவித்துக் கொண்டே இருக்கும்பொழுதுகூட, சித்வஸ்துவாகிய நமது உற்பத்தி, அபிவ்ருத்தி இவைகளில் உள்ள நற்குணங்களிலும், நற்பாகுபாடுகளிலும் நமக்கு நம்பிக்கை ஏற்படவில்லையே. நமக்கு ஏற்பட்டுள்ள மயக்கத்தைத் தவிர வேறு என்ன காரணம் இதற்குக் கூறமுடியும்?

மனிதன் அறிவு வளர்ச்சியினால் தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபடுகிறான். அவ்விதமான தத்துவ ஆராய்ச்சிகள் அந்தந்தக் காலங்களின் சூழ்நிலைகளின் காரணங்களினால் சிறிது சிறிது மாறுபடுகின்றன. ஆயினும் கடவுள், கடவுளின் ஆக்கல் நிறுத்தல், அழித்தல் இவைகளின் சக்தி, அசைப்பொருள், அசையாப்பொருள், நன்மை, தீமை இம்மாதிரியான உண்மைத் தத்துவங்கள் எல்லாவிடங்களிலும், எக்காலத்திலும் ஒருமாதிரிதானிருக்கின்றன.

சூழ்நிலை காரணமாய் ஏற்பட்ட காரணங்களினால் சில வெளிப்படையான அம்சங்களில் மாறுதல்கள் காணப்படுவதால், மதவேறுபாடுகள் ஏற்பட்டன. இம்மாதிரியான மாறுபாகள் ஏற்படுவதற்கு முன், நமது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் உட்பட்டதாக ஹிந்துமதமும் ஸமூஹமுமே புராதனமாக நமது இடையே காணப்படுகின்றன. ஹிந்துமதத்திலிருந்து ஏற்பட்ட மாறுதல்களைக் கொண்டேதான் தத்காலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன பாக்கி எல்லா மதங்களும். அதாவது மிகவும் புராதனமானதென்று ஒப்புக்கொள்ளப்பட்ட இந்துமதத்தின் உண்மைத் தத்துவங்களைக் காட்டிலும், அதிகப்படியான தத்துவங்கள் இதர மதங்களில் இப்பொழுது காணப்படுவதில்லை. உண்மைத் தத்துவத்தை அடையும் முயற்சியில்; அல்லது ஸாதனங்களில் மாறுபாடுகள் சூழ்நிலைகளையநுஸரித்து, மாறுபாடுகள் இருக்கின்றன. உண்மை இப்படியிருந்தும் புராதனமான ஹிந்துமதப் பற்றுள்ளவர்களைக் காட்டிலும், இதரமதப்பற்றுள்ளவர்கள் அதிக ஆற்றலுடையவர்களாகவிருக்கிறார்கள்.

மதம் என்பது ஒன்று. அதில் காணப்படும் ஆசார அநுஷ்டானங்கள் என்பது வேறு. ஆனால் இவைகளுக்குள் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு மதத்தின் கோட்பாடுகளின்படி விதிக்கப்படும் அநுஷ்டானங்களை விட்டுவிட்டால் அந்த மதமே மாற்றப்பட்டதாகும்.

நவீன மனப்போக்குள்ளவர்கள் நற்குண, நற்செய்கைகளுடன் இருந்தால் போதும் என்றும், மதக் கோட்பாட்டுகளுக்கு உட்பட்டதாயினும் வெளிவேஷங்களை நாம் பின்பற்றவேண்டியது அவசியம் இல்லை என்றும் கூறுவதை தினமும் நாம் கேட்கிறோம். இது ஹிந்துமதத்திலுள்ளவர்கள்மட்டும்தான் சொல்லும் விஷயம். இதர மதத்தினர் இவ்விதம் கூறுவதில்லை. நமது ஸமூஹத்தில் உள்ள பலர் ஆலயங்களுக்குச் செல்வது அனாவச்யம், ஆசார அநுஷ்டாநங்கள் நம்மால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டவைகள். உண்மை பக்தி நமக்கு எங்கும் எவ்விதத்திலும் உண்டாகும் எனக் கூறுகிறார்கள் அல்லவா? அதுபோல்தான்.

சில தினங்களுக்கு முன் எகிப்து தேசத்தில் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முகம்மதியர் தன் தொழுகைக்கு முன் காலலம்பிக்கொள்வதை போட்டோ பிடித்து ஹிந்து பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்கள். அவர்களுடைய பழக்கத்தில் ஒவ்வொரு மசூதியின் அருகிலும் ஒரு குளம் இருத்தல் வேண்டும். அதில் கை, கால்களை சுத்தம் செய்துகொண்டுதான் பள்ளிவாசற்தொழுகைக்குச் செல்லுவார்கள். எவ்வளவு கண்டிப்பாக இந்த வெளிப்படையான கொள்கையை ஆதரிக்கிறார்கள்! கால் சுத்தம் செய்யாமலேயே மனச்சுத்தத்துடன் கடவுளைத் தொழமுடியும் என நவீனத்தவர் வாதாடுவர்.

இதேபோல் கிருஸ்தவ மதத்தினர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாதாகோவில் செல்லுவதும், பிரார்த்தனை செய்வதும் தனது கடமை எனக் கருதி அனுஷ்டித்து வருகிறார்

கள். அதுவும் தவிர சிறுபிராயம்முதல் காலையில் எழுந்தவுடன், ஆஹாரத்திற்குமுன் இரவு படுக்கும்முன் இப்படி குறிப்பிட்டுள்ள காலங்களில் கடவுளைத் தொழுவது வழக்கத்தில் போதிக்கப்பட்டும், அனுஷ்டிக்கப்பட்டும் வருகிறது. நமது மதத்தில் காணப்படும் தத்துவங்கள் முன் கூறப்பட்டவைகளைக் காட்டிலும் பன்மடங்கு சிரேஷ்டமானவைகள். சரீரசுத்தி, ஆத்மசுத்தி இவைகள் நமது முன்னோர்களால் மிகவும் வற்புறுத்தப்பட்டவைகள். ஆனால் நமது மதத்தினர் எவ்வளவு தூரம் வாழ்க்கையில் மேற்கூறிய ஆசார அநுஷ்டானங்களைக் கைப்பற்றி வருகின்றனர்.

உலகில் ஒவ்வொருவரும் அவர்களுடைய தேசாசாரங்களுக்கேற்ப, பழக்கவழக்கங்களுக்கேற்ப ஆடையாபரணங்கள் அணிந்திருப்பதை நாம் பார்க்கிறோம். பர்மியர் என்றுடு சென்றாலும், தங்களுடைய உடையை மாற்றுவதில்லை. அராபியரும் அதுபோலவே மேல்நாட்டாரும்தான் அப்படி. ஆனால் நமது ஹிந்துக்கள் நமது ஆடையையோ ஆசாரானுஷ்டானங்களையோ புறக்கணித்து மற்றவர்களைப்போல் மாறுவதில் ஆர்வத்துடனிருக்கின்றனர். இது எவ்வளவு அனர்த்தங்களை விளைவித்திருக்கிறது என்பது நமக்கு நன்கு தெரியும். இப்படியே மாறுதல்களை அநுமதித்துக்கொண்டே போனால் நமது ஸமூஹமே மறைந்து ஓர் புதிய ஸமூஹம் ஏற்படும் என்பது திண்ணம்.

நமது நாட்டில் கிருஸ்துவ மதப் ப்ரசாரத்திற்காக ஆயிரக்கணக்கான மதமாற்றப்ப்ரசாரகர்களையும், அவர்களுக்கு உதவியாக லக்ஷக்கணக்கான ரூபாய்களையும் மேனாட்டார்கள் கொடுத்துதவி, நமது நாட்டினரை மதமாற்றத்திற்கு திட்டமிட்டு வருகிறார்கள். இத்தீமையை நாம் தடுத்தாகவேண்டாமா?

நமது நாட்டிலோ பண்டைப்பண்பாக வந்த உயர்ந்த பாகுபாடுகளை மறைக்கவோ, பொருளாதாரத்தையே முக்ய நோக்கமாகக்கொண்டு பற்பல ஸ்திரமற்றசீர்திருத்தங்களையே செய்துவருவதில் நோக்கமாகவோ இருந்து வருகின்றனர் பற்பல செல்வாக்காளர்கள்.

புத்தபிக்ஷுக்கள் ஒரு தனி உடையை வகுத்துக்கொண்டுள்ளனர். சீக்கியர் உடை, சிகை இவைகளில் சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டுள்ளனர். முஹமதியர்களில் பெரும்பாலோரும் அப்படியே. மேனாட்டாரைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. அப்படியிருக்க ஹிந்துக்கள் மட்டில் தங்களுடைய பண்பாடுகளை உதறித் தள்ளிவிட்டு மற்றோர்களின் தோற்றத்தில் புகுந்துகொள்வதில் ஆசையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். இம்மாதிரியே நமது ப்ராசீன தர்மங்களையும், ஆசாராநுஷ்டானங்களையும் பண்பாடுகளையும் நமிழந்துகொண்டே போனால் நமது ஸமூஹமும், ஸம்ப்ரதாயமும் அழியும் என்பதில் என்ன ஸந்தேஹம் இருக்க முடியும்.

பிறர்களுடைய நாகரிகத்தையே நம் நாட்டு நாகரிகமாகக் கருதி, நமது புராதன சின்னங்களைக் கண்டு பரிஹஸிக்கும் பாமரர்களைக் கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. நாட்டின் பெருமைக்கு ஆதாரமானவைகளைப் புறக்கணித்துவிட்டு, அயல் நாட்டுப் பழக்கவழக்கங்களை நம்முடையதாக பாவித்தும் புராதனமானவைகளை நிந்தித்தும் வருகிற ஓர் கூட்டத்தின் மடமையை நாம் என்னென்றுரைப்பது

நமது ஸமூஹத்தில் கற்றறிந்தவர்களாவது இனி தாங்கள் ஒவ்வொரு கார்யத்தையும் நன்கு யோஜித்து, நமது பெருமைக்குக் காரணமான பழக்கங்களையும், ஆசாரங்களையும் புறக்கணிக்காமலும், புறக்கணிப்பதைப் பார்த்திராமலும் நடந்துகொள்வார்களேயாகில் நமது நற்காலம் உதிக்கிறதாக நாம் எண்ண இடமுண்டு.

பெற்ற தாயை மறந்து புது மோஹத்தில் ஈடுபடுபவர்களின் கதியைக் கண்டு நாம் வருந்தவல்லவா வேண்டிவருகிறது. அதுபோலத்தான் நவீனத்தவிர்களின் போக்குக்கும் நாம் வருந்துகிறோம். ஒவ்வொருவரும் தம்மாலானவர்களுக்கு நற்புத்தியைப் புகட்டுவார்கள் என நாம் நம்ப இடமுண்டா? என்றையதினம் இம்மாதிரியான நிலைமை ஏற்படுமோ அன்றுமுதல் நாம் நமது ஸமூஹத்தைக் காப்பாற்றுபவர்கள் ஆவோம்.

ஸ்ரீ:

மங்கை நல்லார் மனோபாவத்தில் விஷ்ணுசித்தன்

பிள்ளைத் தமிழ் பாடும் பெரியோனாகிய பட்டர்பிரான் பிள்ளைப் பிராயத்தில் துள்ளித் துள்ளியோடும் கள்ளமிலா விளையாட்டால் பேரின்பவெள்ளம்பெருகச் செய்துகேட்போர் நினைப்போர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கள்ளவிழ்த் தாமரைக் கண்ணனாகிய யசோதையிளஞ்சிங்கத்தைக் குறித்துக் கொள்ளையின்பம் குலவு கவிதைகளை அள்ளி யள்ளி வீசுகிறார்.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தின் இன்ப விளையாட்டுக்களுக்கு ஓர் எல்லையுண்டோ, அல்லது வள்ளல் பெரியாழ்வாரின் பிள்ளைக் கவிதைக்குத் தான் ஓர் உவமையுண்டோ? இல்லை இல்லை. முக்காலுமில்லை. அவைகளுக்கு அவைகளே உவமை. வேறு உவமை கூறுவது அநந்தனுக்கும் ஆகாது. என், அவன்மேல் பள்ளி கொண்ட ஆழியானுக்குமாகாது எனலாம். யசோதைப் பிராட்டி ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா என்னென்ன கோலங்கள் செய்து மகிழ்ந்தனளோ அவைகளையெல்லாம் தமது ஜ்ஞான த்ருஷ்டியாலுணர்ந்து அர்ச்சாவதார எம்பெருமானுக்குச் செய்வதுடன் அவைகளை வாயார மனமாரப் பாடியும் அனுபவிக்கிறார் விஷ்ணுசித்தர். சிற்சிலவிடங்களில் யசோதைக்கும் அதிகமாக அனுபவித்திருக்கிறார். கண்ணனைத் தன் குழந்தையாக மட்டுமே யசோதையால் அனுபவிக்க முடியும். குழந்தையாகவும், கோமானாகவும், பச்சைப் பாலகனாகவும், பரம்பொருளாகவும் அனுபவித்த அழகு பட்டர்பிரானுக்கே உள்ளது,

யசோதையைப்போல் விஷ்ணுசித்தர் கண்ணனை நீராட அழைக்கிறார்; பாடியழைக்கிறார்; குழல்வார அழைக்கிறார். பூச்சூட்ட அழைக்கிறார். இவ்வலங்காரங்கள் முடிந்ததும் கண்ணனது வெள்ளமிட்டோடும் அழகு யசோதையை பிச்சேற்றியதுபோல் பட்டர்பிரானையும் பிச்சேற்றுகிறது. ஆனால் தான் பிச்சேறியிருந்தாலும் யசோதையின் பிச்சேறிய நிலையைப் பட்டர்பிரான் காணத் தவறவில்லை. குழந்தைக்கு த்ருஷ்டிதோஷம் வராமலிருக்க வேண்டுமே, நம் கண்ணே படலாம் என்று பயந்த யசோதை கண்ணனுக்குக் காப்பிடுகிறாள். அப்படியே தானும் காப்பிடுகிறார் விஷ்ணுசித்தர். ஆனால் ஒரு விசேஷம். அர்ச்சாவதார எம்பெருமானுடன் ஆயர் பெருமானையும் சேர்த்துக் காப்பிடுகிறார். பரமனுக்கும் பல்லாண்டு பாடியவரல்லவா பட்டர்பிரான். காப்பு இட்டாகி விட்டது. காப்பிட்ட குழந்தையை வெளியில் அனுப்புவார்களா? குழந்தை உள்ளேதான் இருக்கும். ஆனால் அது சாமானியக் குழந்தையா? எல்லையில்லாத மாயைக்கே ஓர் இருப்பிடமாயிற்றே. அது எப்போது, எங்கே, எதற்காக, எப்படிப் போகுமென்று யாராவது சொல்ல முடியுமா? அங்கே இருப்பதுபோல்தான் இருக்கிறது. எங்கே போயிற்றோ. எப்படிப் போயிற்றோ. வந்துவிட்டார்கள் ஆயர்பாடிப் பெண்கள். ஒருவர் இருவரல்ல, பல மகளிர். வெண்ணெயை எங்கள் வீட்டில் திருடினான் என்று ஒருத்தி. பாலைக் குடித்துப் பானையை உடைத்தான் என்றொருத்தி. என் பெண்ணின் வளையலைத் திருடி நாவற்பழம் வாங்கினான் என்று மற்றொருத்தி. பக்ஷணம் திருடினான் என்று வேறொருத்தி. அப்பப்ப! இப்படி ஒவ்வொருவராகவும் பற்பலராகவும் பல குறைகளை அடுக்குகிறார்கள். என் குற்றம் செய்தாய் என்றால் நானல்லேன் என்று சிரிக்கின்றான், ஆகையால் உன் பிள்ளையாகிய அத்துஷ்டப்பிள்ளையைக்கூவிக்கொள் என்கிறார்கள். கேட்டாள் யசோதை. ஒன்றும் தோன்றாது விழிக்கிறாள். நமது பிள்ளை இங்கே தானே இருக்கிறான். இவர்கள் என் அவன் பேரில் அவதூறு சொல்லுகிறார்கள்? இத்தனை பெண்களும்– அதிலும் நமக்கு மிகவும் வேண்டியவர்கள்– என் பொய் சொல்லவேண்டும்? கண்ணன்மேல் அவர்களுக்கு உள்ள பிரியம் கொஞ்

சமா? ஆதலின் ஏதோ நடவாமல் பேசமாட்டார்கள் என்று மாறி மாறி எண்ணுகிறாள். அவர்களும் அங்கே கண்ணனைப் பார்த்து ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக்கொண்டு சமிஞ்ஞை செய்து கொள்ளுகிறார்கள். அசோதை தன் பிள்ளையைத் தன் வீட்டில் பார்த்தும் அந்த ஆயர் மகளிரைக் கடுமையாகப் பேசி அனுப்பவும் துணியவில்லை. ஓர் விதமாகத் தன் பிள்ளையையே கண்டிப்பதுபோல் பேசுகிறாள். அடே க்ருஷ்ணா! கேசவனே! கொண்டல்வண்ணா! தாய் பேச்சைக் கேளடா, உன்னைத் தூஷிப்பதையே தொழிலாகக் கொண்டவர் வீட்டுக்குப் போகாதேடா. நான் சொல்வதைக் கேட்பது தருமமடா. அயலகத்தார் பேசும் பரிபவம் தரிக்க முடியவில்லை. என்றிப்படிபலவாறு பேசவும் அம்மங்கைமார் ஒருவாறு அகலுகிறார்கள். அப்பால் சென்றார்களோ இல்லையோ வந்தது ஓர் பெருங் கூட்டம். முன்னைய கூட்டத்தைவிடப் பெரியது. இவர் சொல்லும் குற்றங்கள் அவர்கள் சொல்லியதைவிட மிகப் பெரியது. அம்மா யசோதை! நாங்கள் ஆற்றில் விளையாடிக் கொண்டிருந்தோம். உன் பிள்ளை எங்கள் மேல் சேற்றை வாரி எறிந்து எங்களுடைய புடவைகளை எடுத்துக்கொண்டு காற்றையும்விட வேகமாக வந்து வீட்டில்புகுந்துவிட்டான் என்றிப்படிப் பேசுகிறார்கள் சிலர். எங்கள் புடவைகளை எடுத்துக்கொண்டு வானளாவிய மரத்திலேறி விட்டான். வேண்டினாலும் தந்தானில்லை என்று சொல்லுகிறார்கள் சிலர். கேட்டாள் யசோதை. இதென்ன ஆச்சரியம். இவனோ சிறு குழந்தை. இப்போதுதான் மஞ்சனமாட்டிப் பூச்சூட்டிக் காப்பிட்டோம். இக்குழந்தை அங்கெப்படி போயிற்று? எப்போது போயிற்று? எப்படிப் புடவைகளுடன் மரமேறிற்று? வானமளாவும் மரமாமே! அதிலாவது குழந்தை ஏறுவதாவது. அது நிற்கப் புடவைகளுடன் வீட்டில் வந்து புகுந்தானாமே. இங்கு அப்படி வேற்றூர் புடவை ஏது? காற்றைவிடக் கடிய வேகமாக வந்தானாமே. துள்ளியோடும் இளங்கன்றுகளையும் முரட்டு மாடுகளையும் கொடியில் பிடிக்கும் ஆய்ச்சிகளால் பிடிக்கமுடியாத வேகத்துடன் இவன் எப்படி ஓடி வந்திருப்பான்? இப்படியும் நடந்திருக்கக் கூடுமா? அல்லது அபாண்டமான பொய்யா? இருப்பினும் ஆய்ச்சியர்கள் நீராடுகையில் அங்கே செல்வது குற்றமாகும். மேலும் புடவைகளை எடுப்பது மன்னிக்கற்கரிய குற்றமாகும். ஆனால் அக்காரியங்களை இக்குழந்தை துர் எண்ணங்களுடன் செய்திருக்க முடியுமா? இப்படி எண்ணிக்கொண்டு யாதும் தோன்றாமல் குழப்பத்துடன் தன் குழந்தையையும் அம்மாதர்களையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். பொய்யென்று அவர்களை மறுப்பதா அல்லது மெய்யென்று தன் கண்ணான கண்ணனைக் கடிவதா? இவளது தயக்கத்தைக் கண்ட அப்பெண்கள் யசோதை ஒருவேளை தங்களை நம்பவில்லையோ என்று சிந்தித்து அவளது நம்பிக்கைக்காக கண்ணன் மேல் மேலும் சில குற்றங்களைக் கூறுகிறார்கள். உண்மையில் த்வேஷபுத்தியுடன் கூறுகிறவர்களல்லாதபடியாலும் கண்ணனது நினைப்பே அவர்களை நிலைதடுமாறச் செய்வதினாலும் இன்னதைத்தான் சொல்லுகிறோமென்பதை யோசியாமல் யசோதைக்கு ஏற்கனவே தெரிந்த சில செய்கைகள் கண்ணன் செய்தவைகளைச் சொல்லுகிறார்கள். காளியமர்த்தனம், தேனுகாஸுரவதம், ஆயர்வீட்டில் வெண்ணெய்க் களவு, பூதனை வதம் முதலியவைகளையும் சொல்லுகிறார்கள். இப்போது அவர்கள் சொல்லியவைகள் புதிய குற்றங்களோ அல்லது செய்கைகளோ அல்ல. ஆயினும் இவை யசோதைக்கு ஓர் புதிய எண்ணத்தை உண்டாக்குகின்றன. காளியமர்த்தனம், பூதனை வதம் முதலியன செய்த குழந்தை என் புடவைகளுடன் விண்தேய் மரத்திலேறியிருக்கக் கூடாது? ஏன் காற்றைவிடக் கடுவேகமாக ஓடியிருக்கக் கூடாது? என்று நினைக்கிறாள். அத்துடன் வேறொரு எண்ணமுந் தோன்றுகிறது. அந்தப் பெண்கள் கண்ணன்மேல் கோபமோ அல்லது த்வேஷமோ கொண்டவர்களல்லர். அவனிடம் உள்ள அன்புதான் அவர்களை அப்படி இழுத்திருக்கிறது, என்பதையும் நினைத்து மகிழ்கிறாள். அந்த எண்ணத்திலேயே கண்

ணனைத் தண்டிக்கும் நினைவு மெள்ள நழுவுகிறது. இவையனைத்தையும் திரைப் படம் போல் காண்கிறார் விஷ்ணுசித்தர். காண்பது மட்டுமல்ல. அந்த அனுபவத்தையப்படியே பாசுரமாகவும் பாடி நம்மை மகிழ்விக்கிறார். அந்த குறைகூறும் பெண்களைப் பட்டர்பிரான் மங்கை நல்லார் என்று பாடுகிறார். ஷை இரண்டு திருமொழிகளையும் முழுதும் இங்கு ஆராய நாம் புகவில்லை. அதற்கு இடம் பற்றாது. அவைகளில் ஒரு பாசுரத்தை ஈங்கு நோக்குவோம்.

'வானத்தெழுந்த மழை முகில் போல் எங்கும்
கானத்து மேய்ந்து களித்து விளையாடி
ஏனத்துருவாய் இடந்தவிடம் மண்ணினைத்
தானத்தேவைத் தானாலின்று முற்றும்
தரணியிடந் தானாலின்று முற்றும்'

வானத்து எங்கும் நிறைந்தெழுந்த மழையுடன் கூடிய மேகம் போன்ற மஹாவராஹாவதாரத்தில் வானத்தைக் காட்டிலும் பெரிதாக எழுந்து பூமியைத் தன் கோட்டினால் குத்தியெடுத்து அதன் ஸ்தானத்தில் வைத்ததோடல்லாமல் தன்னுடைய ஸ்தானத்தில் தன்னுடன் வைத்தவன் வானத்தவர்களுக்கு அருளைச் செய்து கொண்டிருந்தான். அவர்களை வாழ்விப்பதோடல்லாமல் பூமியிலுள்ளாரையும் வாழ்விக்கத் திருவுள்ளம் பற்றி இங்கே வந்து பிறந்து கடல் பரப்பிலிருந்து மழை முகில்எழுவது போல்வளர்ந்து, வளரும்போதே மழையுடன் எழும் மேகம்போல் அவ்வப்போது அனுக்ரஹத்தைச் செய்துகொண்டு, அதிலும் காட்டில் வாழும் ஏழை ஜாதியினருக்கும், மிருகங்களுக்கும், முனிச்ரேஷ்டர்களுக்கும் ஒருசேர அருளைப் பொழிந்துகொண்டு அதையே மிகவுகந்து லீலாரஸமாக அனுபவித்துக்கொண்டு பூமண்டலத்தையே ஓர் ஒப்பற்ற ஸ்தானத்தில் வைத்து அனுக்ரஹம் செய்துவிட்டான் என்கிறார். வராஹாவதாரத்தில் கோட்டால் எடுத்து அணைத்த பூலோகத்தை க்ருஷ்ணாவதாரத்தில் சங்கசக்ரரேகைகள் பதிந்த தம் திருவடிகளால் ஒற்றி முத்திரையிட்டுக்கொண்டு நடந்து காடும் நாடும் ஒருசேரத் தன் உடைமை என்பதை வெளியிட்டருளினான். மேய்ந்து என்பதனால் ஓர் பசு காட்டில் புகுந்து மனிதர்களுக்கு உபயோகமற்ற புற்களையும் பூண்டுகளையும் மேய்ந்து அமுதமாகிய பாலினைத் தருவதுபோல்உபயோகம் சிறிதுமற்றவர்களையும் உய்வதற்கே வழியறியாத கேடர்களையும் தான் தன் பொறுப்பில் வருந்தியெடுத்து அவர்களது பாபங்களைப் போக்கி அழியாத நற்பதம் தருவதை விளக்குகிறார். கானத்து என்பதனால் மனிதரையேயன்றிப் பசு பாம்பு முதலியவைகளையும் அசேதநப் பொருள்களையும் தனது புல்லாங்குழல் கீதத்தினால் தம்மிடம் ஆகர்ஷித்து அருள் புரிந்தமையையும் தம்மைப் போல் இனிய கீதத்தில் இனிய பாடல்களைப் பாடுகிற தொண்டர்களையும் தம்மிடம் மையலையும் மஹாவிச்வாஸத்தையும் பெருகச் செய்து தம் வசப்படுத்திக் கொள்ளும் தன்மையையும்கூட விளக்குகிறார் விஷ்ணு சித்தர். மேலும் தானத்தே என்பதனால் வராஹாவதாரத்தில் தன்னால் காப்பாற்றப்பட்ட தன்னுடைய பூமியையே வாமனாவதாரத்தில் மற்றொருவரிடம் தானமாகப் பெற்ற மாயை போலவே தமக்கு இயல்பாக அமைந்த சேஷபூதர்களும் தாஸபூதர்களுமான இடைச்சிகளுடைய புடவைகளைத் தான் எடுத்துக் கொண்டோடியதாகவும் கண்ணன் தகாத செய்கை செய்தானென்று இடைச்சியர் தம்மேல் குற்றங் கூறுவதாகவும் உலகினுக்கு ஓர் மாயாவிலாஸம் காட்டுகிறார். என்னே இவன் மாயை? இது என்ன மஹாதாச்சர்யச் செய்கை? யென்று பூரிக்கிறார் பட்டர்பிரான். இவ்வளவு மஹத்தான உண்மைகளையும் அத்யத்புத அனுபவ அமுதப் பெருக்கங்களையும் தான் காணுவதற்குத் தக்க வகையில் தகுந்த சொற்களைத் தம் முறையிட்டிலே கூறியமைபற்றி அவ்விடைச்சியரை மங்கை நல்லார் என்று வாயார வாழ்த்துகிறார் பட்டர்பிரான்.

ஸ்ரீ:

தேச உலக ரக்ஷை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

31. விவேகம்

நமது உடலில் கைகால்கள் போலவும் அரசாங்கத்தில் ராஷ்ட்ரபதி மற்ற அதிகாரிகள் எழுத்தாளர்கள் ஸேவகர்கள் என்ற பதவிகள் போலவும் ப்ரதேசம், பாஷை, ஜாதி, மதம், தொழில் என்ற இவற்றாலுண்டான பல பேதங்கள் உள்ளனவாயினும் இவையெல்லாம் உலகநடைக்கு இன்றியமையாதனவாய் முடிவில் ஒரே நோக்கத்தைக் கொண்டனவாகையால் விவேகிகள் இவற்றைச் சிறிதும் பகைக்குக் காரணமாகக் கொள்ளமாட்டார்கள். தலைவலி வந்தால் அதற்கு வைத்யம் செய்யவேண்டுமேயன்றித் தலையை வெட்டி விடுவதில்லை. அதுபோல் இத்தகைய பேதங்களால் கலஹம் விளைந்தால் அது விவேகமற்றவர்களின் செய்கை என்பதை உணர்ந்து அவர்களுடைய அந்த அவிவேகத்தைப் போக்கி வேண்டிய அளவு விவேகத்தை உண்டாக்க முயலவேண்டுமேயன்றி ப்ரதேசங்கள் முதலியவற்றின் பாகுபாட்டையெல்லாமழித்து ஒன்றாகவே ஆக்கிவிடுவது என்று மனஸ்ஸினால் எண்ணுவதும் கூடாது. விவேகமில்லாதபோது எல்லாம் ஒன்றாக இருந்தாலும் கலஹம் ஏற்படுகின்றது. விவேகமுள்ளபோது எல்லாம் வேறாயினும் பகை உண்டாகின்றதில்லை.

32. நமது தவறு

இப்படித் துர்க்குணமொன்றும் உண்டாகாமல் ஜனங்கள் அமைதியோடு ஸுகமாக வாழ்வதற்குமுக்யகாரணமான உத்தமவிவேகத்தை ஒருவர்விடாமல் நாட்டிலுள்ள ஸர்வஜனங்களுக்கும் பூர்ணமாக உண்டாக்குவதற்குரிய சிறந்த வழியை ஏற்படுத்தியிருப்பது நமது முன்னோர்நமக்குச்செய்திருக்கும்பேருதவியாகும். அதைப்பின்பற்றி ஜனங்களுக்குவிவேகத்தை உண்டாக்காமலிருப்பது நம் தவறு. இப்போது நாம் அனுபவிக்கும் எல்லாக் கஷ்டங்களுக்கும் மூலகாரணமாயிருப்பது நம்முடைய இப்பெருந் தவறுதான். ஸூர்யன் போல் நமக்கு வெளிச்சத்தைத் தருவதற்காகவே ஏற்பட்ட அருமையான உபதேசத்தைப் பார்க்கவே கூடாதென்று பிடிவாதமாகக் கண்ணை மூடிக்கொண்டு நம்புத்திபலத்தாலேயே எல்லாவற்றையும் ஸாதிக்க முடியுமென்ற அஹங்காரத்தைக் கொண்டிருக்கின்றோம். இதனால் முன்னமே குறிப்பிட்டபடி

> ‘ஒருவன் பிறக்கும்போதே மூன்று கடன்களோடு பிறக்கின்றான். அக்கடன்கள் ரிஷிகளுக்கும் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டியவை. அவற்றில் ரிஷிகள் கடனை வேதாத்யயனம் செய்தும், பித்ருக்கள் கடனை ச்ராத்தம், தர்ப்பணம் முதலிய பித்ருகார்யங்களை முறைப்படி செய்யக்கூடிய ஸத்புத்ரர்களைப் பெற்றும், தேவர்கள் கடனை யஜ்ஞம் செய்தும் தீர்க்க வேண்டும்’

என்று கடனாக ரூபகம் செய்து எவ்வித காரணத்தினாலும் விடாமல் அவச்யம் செய்யவேண்டியவை என்று உபதேசிக்கப்பட்ட ஜீவாதாரமான முக்ய விஷயங்களை உபேக்ஷித்ததன்றி வெறுக்கவும் தடுக்கவும் ஆரம்பித்துவிட்டோம். ஸத்யம், திருடாமை, அஹிம்ஸை என்கிற இவை ஸர்வஜனங்களும் அனுஷ்டிக்கவேண்டிய பொது தர்மங்கள். ஸர்வஜனங்களும் இவற்றில் ஊன்றி நிற்கும்படிச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமை. இது இப்பொழுது முற்றிலும் மறக்கப்பட்டிருக்கிறது. காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற இந்தத் தீய குணங்கள் நமக்குள்ளேயே இருந்து நம்மைக் கெட்ட வழியில் போகும்படி செய்து தீங்கு விளைவிக்கின்றனவாகையால் இவை உள்சத்ருக்கள் எனப்பட்டிருக்கின்றன. இவற்றை வெல்லுவதற்கு வேண்டிய வழியைத் தெரிந்து பின்பற்றாமலிருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல் அவை மேல்மேலும் வளரும்படியான நிலைகளையே உண்டாக்கிக்கொண்டு வருகின்றோம்.

33 அர்த்த காமங்கள்

உலகத்தில் ஸாமாந்ய ஜனங்கள் இயற்கையாக இரண்டு நோக்கங்களை முக்யமாகக்கொண்டு அவற்றைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்வார்கள். அவை 'அர்த்தம், காமம்' அல்லது 'பொருள், இன்பம்' என்பவை. இவற்றில் ஆசை அதிகமானபோது தீங்கு விளையும். ஆசையால் இவற்றுடன் தர்மத்தையும் சேர்த்து தர்மத்திற்கு விருத்தமில்லாத பொருளும் இன்பமுமே நமது லக்ஷ்யமாயிருக்க வேண்டுமென்று உபதேசம் செய்யப்பட்டிருக்கின்றது. இதுவும் இப்போது மறக்கப்பட்டிருக்கின்றது.

34. திகைப்பு

இக்காரணங்களால் நாம் இப்போது மனிதர்களினாலும் நம் சக்திக்குள்படாத மற்றும் பல காரணங்களினாலும் அநேகவித கஷ்டங்களை அனுபவித்து வருகின்றோம். இந்த உண்மையை அறிந்தவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள். ஆயினும் பலர் இருக்கின்றனர். மேனாட்டு நாகரிகமுறை எங்கும் வெகு வேகமாகப் பரவி நாளுக்கு நாள் வலிவு பெற்று நமது நாட்டின் ஆத்மாவை அழித்து வருவதைப் பார்த்துத் திகைத்து என்ன செய்வதென்று தோன்றாமல் அவர்கள் தம் மனத்துக்குள்ளேயே பெரும் வேதனை பட்டுக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் விருப்பத்தின்படி இப்போது மற்றெல்லாவற்றிற்கும் முன் மிகப் ப்ரதானமாகச் செய்யவேண்டிய காரியம் நமது நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தமது ஆத்மாவையும், தர்மமார்க்கத்தின் பெருமையையும் கட்டாயமாய் வேண்டிய அளவு அறியும்படி செய்வதுதான். முதலில் ராஜ்ய நிர்வாஹத்தைச் செய்து வருகின்றவர்கள் அந்த அறிவைப் பூர்ணமாகப் பெறவேண்டும்.

35. விபரீதம்

இப்பூவுலகமேயன்றி மேலுலகங்கள் பல, கீழுலகங்கள் பல, என்ற இவற்றையெல்லாங் கொண்ட முழு ப்ரம்மாண்டத்தையும் அதன் முக்காலத்தையும் புத்தியில் வைத்து அதன் ஓர் அவயவமான இப்பூமியில் உள்ள மனிதராகிய நாம் செய்யவேண்டியது இது என்பதை நம் க்ஷேமத்தைக் கருதி நமது முன்னோர்கள் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்றார்கள். அதை நாம் கற்றறியாமலிருப்பது தவறு. அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றாவிட்டால் என்னென்ன கஷ்டங்கள் உண்டாகுமென்று அவர்கள் சொல்லியிருக்கின்றார்களோ அவையெல்லாம் இப்போது உண்டாகி நம்மை வதைத்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையிலும் அதைப் பற்றி நாம் ஆலோசிக்காமலிருப்பது பெருந் தவறு. பிறநாட்டாருடைய பழக்கத்தாலும் அவர்களுடைய கல்வியையே கற்றதாலும் உண்டான விபரீத வாஸனையினாலே அப்புராதன வழியை அழிக்கவும், அதற்கு நேர் விபரீதமானதும், 'இதைப் பின்பற்றினால் பெரும் தீங்கு உண்டாகுமென்று நம் முன்னோர்களால் வெகு அழுத்தமாகக் கண்டிக்கப்பட்டதுமான துர்வழியை உண்டாக்கி ஸ்திரமாக்கவும் முற்பட்டிருப்பது மாபெருந்தவறு. இதைச் செவ்வையாக எல்லோரும் உணரவேண்டும்.

36. நம்பிக்கை

எங்களுக்கு அதில் நம்பிக்கையில்லையென்பது கூடாது. நம்பிக்கையில்லாதது அவர்களுடைய தனிப்பட்ட ஸொந்த விஷயம். நம்பிக்கையுள்ளவர்கள் பலர் இருக்கின்றனர். இது இவர்களுடைய ஸொந்த விஷயமன்று. சாஸ்திரங்களில் விதித்தபடி தர்மம் அனுஷ்டிக்கப்படவில்லையாகையால் தைவகோபமும் அதனால் க்ஷாமமும், அதிவ்ருஷ்டியும், ஜில்லா ஜில்லாவாகப் பயிர்களை அழிக்கும் பூச்சிகளும், மனிதர்களுக்கு எல்லை மீறிய கோபதாபங்களும் உண்டாகி நமக்குச் சொல்லவொண்ணாத துயரத்தைத் தருகின்றனவென்றும், தர்ம மார்க்கம் முன்போல் பரிபாலிக்கப்பட்டு வந்தால் இக்கஷ்டங்கள் உண்டாகமாட்டாவென்றும் இவர்கள் நம்புகின்றார்கள். ஆகையால் இவர்களுடைய நம்பிக்கை தேசக்ஷேமத்தைப் பற்றியது. இப்படி லக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவுமுள்ள மக்களின் நலத்தை உத்தேசித்து அதற்கு முக்ய காரணமாகக் கருதப்பட்டும் அநாதிகாலமாக மஹர்ஷிகளென்றும் ராஜர்ஷிகளென்றும் ப்ரஸித்தர்களான பெரியோர்களால் போற்றி அனுஷ்டிக்கப்பட்டும் வந்த தர்ம மார்க்கத்தை எங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று கொண்டு கெடுக்கமுயல்வது எவ்வ

ளவு மூடத்தனம், எவ்வளவு கொடுமை என்பதை உணர முயலவேண்டும். புருஷகாரமெனப்படும் நம் முயற்சி, தைவம் இரண்டையும் ப்ரதானமாக நம் முன்னோர் கொண்டிருக்கின்றனர். இவற்றில் முந்தியதை மாத்திரம் கொள்வது நாஸ்திகத்தனமும் முரட்டுத்தனமுமாகும். பிந்தியதை மாத்திரம் கொள்வது மூடத்தனமாகும். ஆகவே நாட்டினுடையவும், உலகத்தினுடையவும் க்ஷேமத்தைக்கருதி அரசாங்கப் பொறுப்பு வாய்ந்தவர்களும் மற்றவரும் ஸநாதந மார்க்கத்திற்கு விருத்தமாக எதையும் பேசவும் செய்யவும் கூடாது. தத்காலஸ்திதியையனுஸரித்து அரசாங்கம் மதப்பற்று அற்றதாக இருக்கவேண்டியது அவச்யமாகையால் இதில் விசேஷ ஆதரவு காட்டுவது கூடாத காரியமாயிருக்கலாம். ஆனால் விருத்தமான காரியத்தைச் செய்வது வெகு அக்ரமம். மற்ற மதங்களின் விஷயத்தில் எப்படித் தலையிடுவதில்லையோ அப்படியே ஸநாதன விஷயங்களிலும் இருக்க வேண்டும். இதுமட்டுமன்றித் தனித்த முறையில் அதில் ஜனங்களுக்குப் பற்றும் உத்ஸாஹமும் உண்டாகும்படி செய்யவேண்டும்.

37. உலக ரக்ஷகர்கள்

மதப்பற்றுள்ளவர்களும் இக்காலத்தில் பூர்ணமாக யஜ்ஞம் முதலியவற்றை அனுஷ்டிப்பது ஸாத்யமில்லாமலிருக்கின்றது. ஆயினும் காலையில் தூங்கி எழுந்ததுமுதல் ராத்ரி படுக்கப் போகும் வரையில் காலத்தை வகுத்துக்கொண்டு ஒரு க்ஷணமும் வீண்போகாமல் ஔபாஸநம், பகவதாராதனம், வைச்வதேவம், பஞ்சமஹாயஜ்ஞங்கள் என்ற இவற்றை ப்ரதானமாக உடைய கர்மாக்களை பக்தி ச்ரத்தைகளோடு அனுஷ்டித்துவரும் பெரியோர்கள் இன்னும் பலர் இருந்து வருகின்றனர். அனுஷ்டானம் சற்று ஏறக்குறைய இருந்தாலும் வேதத்தைப் பூர்ணமாகக் கற்று அதை ப்ரஹ்மயஜ்ஞம் என்ற முறையிலும் தேவாலயங்களிலும் மற்றவிடங்களிலும் பாராயணம் என்ற முறையிலும் விடாது ஓதி வருகின்றவர்களும் பலர் இருக்கின்றனர். இவ்விரு சாராரே தத்காலம் ஸநாதன தர்மத்தையும் அதன் த்வாரா தேசத்தையும் உலகத்தையும் காப்பவராவர். இவர்களுக்குப் போதிய அளவு ஆதரவில்லாமையால் இவர்களுடைய கீழ்ஸந்ததிகளெல்லாம் நவீனமுறையில் பயிற்சி பெற்று மற்றவர்கள் போலவே குலாசாரங்களை விட்டுவிடுகின்றனர். ஸநாதன தர்மத்தின் பெருமையையும் நாடு உலகம் இவற்றின் க்ஷேமத்தையும் கோருகின்றவர்கள் இந்தப் பயங்கர நிலையை உணர்ந்து வெகு ஸ்வல்பமாகவே உள்ள இந்த வைதிகவம்சபரம்பரை முற்றிலும் நசித்துப் போகாதபடி காக்கவேண்டும். ஆசாரங்களோடு வேதாத்யயனம் செய்து சாஸ்திரங்களைக் கற்று, கர்மானுஷ்டானம் பண்ணி குணசாலிகளாயிருக்கும் பெரியோர்கள் ஜீவனத்திற்கு வருந்தாமலிக்கும்படியும் அவர்களுடைய ஸந்ததிகளுக்குத் தம் குலவித்யை குலதர்மம் முதலியவற்றில் வெறுப்பில்லாமல் ஆசையும் ஊக்கமும் உண்டாகும்படியும், அவர்கள் முகமாக ஸர்வஜனங்களும் நல்லறிவையும் குணங்களையும் பெறும்படியும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இதுவே ஸம்ஸ்க்ருதத்தையும் அதிலுள்ள சாஸ்திரங்களையும் ரக்ஷிப்பதற்கும் சிறந்த வழியாகும்.

38. விவாஹம்

முடிவில் மிகவும் முக்யமான ஓர் விஷயத்தைப்பற்றி மறுபடியும் கூறுகின்றோம். சாஸ்திரங்களில் விதித்த கர்மாக்களைச் சாஸ்திரங்கள் கூறிய முறைப்படி செய்தாலன்றி அவை பலிக்கமாட்டா. செய்வது நிஷ்பலமாகும். அவற்றை உலகத்திற்கு க்ஷேமம் விளையும்படி செய்வதற்குறிய ஆச்ரமம் க்ருஹஸ்தாச்ரமமென்றும், அதனால் இந்த ஆச்ரமமே மற்றெல்லாவற்றிற்கும் ஆதாரமென்றும் எல்லாவற்றிற்கும் மேற்பட்டதென்றும் முன்பே கூறப்பட்டது. இவ்வளவு சிறந்த இந்த ஆச்ரமம் சாஸ்திரங்கள் விதித்தபடி செய்யப் பெற்ற விவாஹத்தினால் அடையப் பெறுகின்றது. ஆகவே நமது ஸம்ப்ரதாயப்படி விவாஹம் கேவலம் லௌகிகமான ஒரு விஷயமன்று. மரித்த பிறகும் அனுபவிக்கக்கூடிய பலனைத் தருவதான ஒரு சிறந்த மதச் சடங்கு. 'தர்மத்திற்காகவும், புத்ரஸந்தானத்திற்காகவும் இப்பெண்ணை நான் மணக்கின்றேன்' என்று ஸங்கல்பம் செய்துகொண்டு விவாஹத்தைச் செய்துகொள்ளவேண்டுமென்கிறது சாஸ்திரம். காமஸுகத்திற்காகவென்று மணந்தால் பாபமுண்

டென்றும் கூறுகின்றது. ஆகவே முக்யமாக தர்மானுஷ்டானத்திற்காகவும் ஸந்தானத்திற்காகவுமேற்பட்ட உத்தம வைதிக கார்யம் விவாஹம். இது விதிப்படி நடக்காவிட்டால் அந்த விவாஹத்தினால் அடைந்த பெண்ணோடு செய்யப்படும் தர்மானுஷ்டானமெல்லாம் வீணாகும். ஒரு பலனையும் தராது. க்ருஹஸ்தாச்ரமமே ஸித்திக்காது. பிறகு செய்யும் ஸர்வ வைதிக் கார்யமும் நிஷ்பலம். அதனால் உலகத்திற்கு ஒரு க்ஷேமமுமுண்டாகாது.

39. சாஸ்த்ர விருத்தமான சட்டங்கள்

விவாஹாதிகளில் பெண் ஸகோத்ரையாயிருக்கக் கூடாதென்றும், ருதுமதியாயிருக்கக் கூடாதென்றும், சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன. யஜ்ஞம் முதலிய வைதிக கர்மங்களை தம்பதிகளாகச் செய்ய வேண்டும். பத்னியில்லாத வெறும் புருஷனுக்கு அவற்றைச் செய்ய யோக்யதை இல்லை. ருதுவானபிறகு மணக்கப்பட்டப் பெண்களுக்கு யஜ்ஞாதிகளில் பத்நியாயிருந்து வைதிக கார்யங்களைச் செய்ய யோக்யதை இல்லை. புஷ்பவதியாவதற்கு முன்பே கன்யாதானம் செய்யவேண்டுமென்றும் விவாஹமாவதற்கு முன் புஷ்பவதியானால் பித்ருக்கள் ஒவ்வொரு மாஸத்திலும் அந்தப் புஷ்பத்தில் மூழ்கின்றார்களென்றும் தர்மசாஸ்திரங்கள் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றன. ஆகவே பதினான்கு வயதுக்கு மேலும் பதினெட்டு வயதுக்கு மேலும்தான் பெண்களுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தில் சட்டமியற்றுவது உலக க்ஷேமத்தையே முக்யமாகக் கொண்ட ஸநாதன மதத்தின் அடிப்படையான விவாஹமுறையை அடியோடு நாசமாக்குவதற்காகச் செய்யப்படும் நிர்பந்தமாகின்றது. ஆயிரம் மாதாபிதாக்களைக் காட்டிலும் அதிக வாத்ஸல்யமுள்ளது சாஸ்திரமெனப்பட்டிருக்கின்றது. இத்தகைய சாஸ்திரங்கள் இருபது வயதுள்ள புருஷன் எட்டு வயதுள்ள பெண்ணை மணக்கலாமென்று சொல்லியிருப்பதற்கு விருத்தமாக சாஸ்திர வாஸனையேயிராமல் நவீன நாகரிக மோகங் கொண்டவர்கள் சொல்லும் எக்காரணத்தையும் ஸநாதன மதப்பற்றுள்ள அறிவாளிகள் எவரும்ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் இவ்விதமானவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள். அதனால் பலமில்லாதவர்கள். ராக்காலங்களிலும் காட்டு வழிகளிலும் திருடர்கள் கையில் அகப்பட்டுப் பரிதவிக்கும் துரதிருஷ்டக்காரர்களின் நிலையிலிருந்து கதி ஒன்றுமில்லால் வருந்துகின்றனர். இதற்காகத்தான் நாடு சுதந்திரம் பெற்றதா என்று தமக்குள்ளேயே கேட்டுக் கொள்ளுகின்றனர். இதையெல்லாம் ஆலோசித்து நன்குணர்ந்து விவாஹவிஷயத்தில் சாஸ்திர விருத்தமான நிர்பந்தத்தை ஏற்படுத்தாமலிருக்க வேண்டியது மிக அவச்யம். இது சிலரின் தனித்த கொள்கைக்காகவன்று, நாட்டின் நலத்திற்காகவே என்பது விரித்துக் கூறப்பட்டது. பொதுவாகச் சட்டமியற்றினாலும் வைதிக கர்மாக்களையனுஷ்டிக்கும் குலத்திலுண்டானவர்கள் சாஸ்திர முறையிலேயே விவாஹத்தைச் செய்ய விரும்பினால் அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும். இப்படியே உலக நன்மைக்காகவே அவச்யம் புத்ரர்கள் செய்ய வேண்டியனவாக மாதாபிதாக்களின் அபரக்ரியைகள் விதிக்கப்பட்டு அதற்குத் தக்கபடி சொத்து விபாக உரிமையும் புத்ரஸ்வீகார முறையும் தர்மசாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டிருப்பதால் அவற்றை தத்காலத்திய சட்ட புஸ்தகங்களைப் போல் பாவித்து நமக்குத் தோன்றியபடி திருத்துவது மிக அபாயமான செயல். பொதுவாக அரசாங்க நிர்வாஹத்திலும் பெரிய பதவிகளிலும் இருப்பவர்கள் தங்கள் சொல்லிலும் நடத்தையிலும் ப்ராசீன மார்க்கத்தில் ஜனங்களுக்கு அவமதிப்பு உண்டாகக் கூடிய ரீதியில் ஒன்றும் காட்டாமல் இதற்கு மாறாக மதிப்பும் ச்ரத்தையும் உண்டாகும்படித் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்ய வேண்டும். வேறு மதத்திலிருப்பவர்களும் அந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஈச்வரபக்தியும் நல்ல குணங்களும் உண்டாகும்படி பாடுபட வேண்டுமேயன்றி ஸநாதன மதத்தைப் பழிக்கக் கனவிலும் நினைக்கக் கூடாது. இப்படியே ஸநாதன மதத்தினரைத் தம் மதங்களில் இழுக்கவும் யத்நப்படக்கூடாது. இதுவே நாட்டையும் உலகத்தையும் காக்க நல்ல வழி.

முற்றும்

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இங்கு அறியவேண்டிய ஸ்ரீமத்ராமாயணகதாஸங்க்ரஹம் வருமாறு:— ஜநஸ்தாநத்தில் கரதூஷணாதிகளின் ஸம்ஹாரம் முடிந்து விட்டது. அகம்பநன் என்ற ஓர் ராக்ஷஸன் போர்க்களத்திலிருந்து எப்படியோ தன்னை விடுவித்துக்கொண்டு வேகமாக இலங்கை செல்கின்றான். ராவணனிடம் ஸ்ரீராமபத்ரனின் பலபராக்ரமத்தை வர்ணித்து அவனிருப்பது ராக்ஷஸகுலத்திற்கே பேராபத்து என்று சொல்கின்றான். தேவர்களாலும் அஸுரர்களாலும் நெருங்கமுடியாத பலமுள்ள ஸ்ரீராமபத்ரனை ஒழிப்பதற்கு உபாயம் அதிரூபவதியான அவன் மனைவியை அபஹரிப்பதே என்றும் கூறி ராவணனைத் தூண்டுகின்றான். இதைக் கேட்ட ராக்ஷஸாதிபதி ராவணனும் ஸீதையை அபஹரிக்கும் விஷயத்தில் தனக்குத் துணை புரியும்படி மாரீசனிடம் சென்று வேண்டுகின்றான். விச்வாமித்ரமுனிவரின் ஆச்ரமஸமீபத்தில் தான் அனுபவித்த ஸ்ரீராமபத்ரபாணப்ரபாவத்தை எடுத்துக்கூறி மாரீசன், ராவணா! நீ ராமபத்ரனை விரோதித்துக்கொண்டால் பேராபத்தே உண்டாகுமாகையால் லங்கை சென்று ராக்ஷஸாதிபதியாக நீண்டகாலமிருந்து உன் மனைவியரோடு ஸந்தோஷமாயிரு. ராமபத்ரனும் காடுகளில் தன் மனைவியுடன் ஸந்தோஷமாயிருக்கட்டும் என்று லங்கைக்குப் போகும்படி சொல்லுகின்றான். இதைக் கேட்ட ராவணன் லங்கைக்கு வருகின்றான். அதே ஸமயத்தில் ராமபத்ரபராக்ரமத்தைக் கண்டு மிகவும் நடுங்கிய சூர்ப்பணகை வேகமாக இலங்கைக்கு ஓடி வருகின்றாள். மந்திரிகள் புடைசூழ ஸிம்ஹாஸனத்திலிருக்கும் ராவணனைக் காண்கின்றாள். ராவணா! உனக்கு நேரிடப்போகுமாபத்தையுணராமல் கேவலம் காமபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறாயே, இது உனக்குத்தகுமா என்று கடுஞ்சினத்துடன் மொழிகின்றாள். ஜநஸ்தாநத்தில் செய்த கராதி ஸம்ஹாரத்தையும் சொல்கின்றாள். தனக்குச் செய்த அங்கவிகாரத்தையும் குறிப்பிடுகின்றாள். மேலும் ஸீதையின் ரூபலாவண்ய ஸம்ருத்தியை வர்ணிக்கின்றாள். அந்த ஸீதை மனையாட்டியாயிருந்து எந்த புருஷனை மகிழ்ச்சியுடன் அணைவாளோ அவனே ஸீதையை மனைவியாகப் பெற்ற பாக்யவிசேஷத்தினால் எல்லாவுலகிலும் உயரிய வாழ்ச்சி பெறுவான் என்றிவ்வாறு கூறி ஸீதையிடம் ஆராகாதலையுண்டுபண்ணி ஸீதையையபஹரிக்கும்படி ராவணனைத் தூண்டுகின்றாள். உடனே ராவணனும் ஸமுத்திரத்தின் மறுகரையிலுள்ள ஓர் புண்ணியவனம் சென்று தவம் செய்யும் மாரீசனைக் கண்டு ஸ்ரீராமபத்ரன் செய்த அங்கவிகாராதிகளைக் கூறி ஸீதையை அபஹரிக்கத் தங்கமான்ரூபமெடுத்துத் தனக்குத் துணை செய்யுமாறு அவனை வேண்டுகின்றான். மறுபடியும் மாரீசன் ராமபத்ரப்ரபாவத்தை விசேஷமாகக் கூறித் தான் துணை செய்ய முடியாது என மொழிகின்றான். உடனே கோபம் கொண்ட ராவணன் என் வார்த்தையைக் கேளாவிடில் நானே உன்னைக் கொல்லுவேன் என்று சொல்லுகின்றான். ராவணன் கையால் மடிவதைவிட தர்மாத்மாவான ஸ்ரீராமபத்ரன் கையால் மரணமடைவதெனத் தீர்மானம் செய்துகொண்டு மாரீசன் பொன் மான் உருக்கொண்டு ஸ்ரீராமபத்ரனின் பர்ணசாலைக்கருகில் மைதிலியின் கண்ணில் படும்படி ஸஞ்சரிக்கின்றான். பொன்மயமான மானைக் கண்டதும் மைதிலி ஆச்சரியமடைந்து அதைப் பிடித்துவரும்படி ஸ்ரீராமபத்ரனை வேண்டுகின்றாள். ஸ்ரீராமபத்ரனும் வெகு தூரம் அதைத் தொடர்ந்து சென்று கொல்லுகின்றான்.

विक्रमयशोलाभविक्रीतजीवितगृध्रराजदेहदिधक्षालक्षितभक्तजनदाक्षिण्य!

விக்ரமயசோலாபவிக்ரீதஜீவிதக்ருத்ரராஜதேஹதிதக்ஷாலக்ஷித பக்தஜநதாக்ஷிண்ய!

(ப-ரை) விக்ரமயச:- அதிக சக்தியினுலுண்டாகும் கீர்த்தியின், லாப—லாபத்திற்காக, விக்ரீத- விற்கப்பட்ட, ஜீவித- ப்ராணனையுடைய, க்ருத்ரராஜ— ஜடாயு என்னும் கழுகுத் தலைவனுடைய, தேஹ— சரீரத்தை, திதக்ஷா— தஹநம் செய்யவேண்டுமென்று விரும்பியதால்- விருப்பத்துடன் தஹநம் செய்ததால் என்றபடி. லக்ஷித— ஸூசிக்கப்பட்ட, பக்தஜந- ஆச்ரிதஜனங்கள் விஷயமான, தாக்ஷிண்ய!- ஔதார்யகுணத்தையுடைய. அன்றிக்கே ஸௌசீல்யமென்னும் குணத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

இங்கு அறியவேண்டிய ஸ்ரீமத்ராமாயணகதையின் ஸங்க்ரஹம்:— தங்கமயமான மாரீசமானைத் தொடர்ந்து செல்லும் ஸ்ரீராமபத்ரன் மற்றைய மான்களைக்காட்டிலும் வேறுபாடு கொண்ட நடத்தையை அம்மானிடம் கண்டான். யாரோ ஒரு ராக்ஷஸன் செய்த மாயையே இதுவெனத் துணிந்தான். ப்ரஹ்மாஸ்த்ரத்தை அம்மானின் மர்மப்ரதேசத்தில் ப்ரயோகித்தான். உடனே மாரீசனும் ‘ஹா ஸீதே! ஹா லக்ஷ்மண!’ என்று ஸ்ரீராமபத்ரன் குரலைப்போல் உரத்த தீனஸ்வரத்துடன் கதறி ப்ராணனை விட்டான். அந்த தீனக்குரலைப் பர்ணசாலையிலுள்ள மைதிலி கேட்டதும் பதறிப் போனுள். ஸ்ரீராமபத்ரனுக்கு ஏதோ பெரிய ஆபத்து நேர்ந்ததாக எண்ணி மிக்க வருந்தினுள். இளையபெருமாளான லக்ஷ்மணனை தீனஸ்வரம் கிளம்பிய திசை சென்று விஷயத்தை அறிந்து வரும்படி ரொம்பவும் தூண்டினுள். இளையபெருமாள் ஸ்ரீராமபத்ரனுக்கு எவ்விதத் தீங்கும் நேரிட முடியாது— இது ராக்ஷஸமாயையே. மேலும் உமக்குப் பாதுகாப்பாக இவ்விடமிருப்பதே என் கடமை என்றிவ்வாறு பல இத மொழிகளை விண்ணப்பித்தார். ஆயினும் ஸீதை கடுங்கோபமுற்றவளாய் ‚குலத்தைக் கெடுக்க வந்த துஷ்டா! என் கணவனுக்கு நேர்ந்த கெடுதியை விரும்புகிறவன் என்றே உன்னை நான் மதிக்கிறேன். என் கணவனுக்குத் துணைவன்போல வந்து என்னையபஹரிக்க நீ எண்ணுகிருய் என நினைக்கிறேன் என்றிவ்வாறு பல பருஷவாக்கியங்கள் பேசி இளையபெருமாளைப் பழித்தாள். இவ்வார்த்தைகளால் மிகவும் மனம் நொந்து இளையபெருமாளும் ஸ்ரீராமபத்ரனிருப்பிடம் சென்ருன். இந்த ஸந்தர்ப்பத்தை எதிர்பார்த்த ராவணனும் கெட்ட எண்ணத்துடன் சந்நியாசி வேஷங்கொண்டு பர்ணசாலைக்குள் நுழைந்தான். இவனை உண்மைச் சந்நியாசி என நினைத்து மைதிலி இவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்யவாரம்பித்தாள். உடனே ராவணன் பலாத்காரமாக லோகமாதாவைத் தூக்கித் தன் தேரின் மேலேற்றி வேகமாக லங்கைக்குச் சென்று கொண்டிருந்தான். ‘ஹா ராம! ஹா லக்ஷ்மண!’ என்றிவ்வாறு புலம்பிக்கொண்டே செல்லும் ஸீதையின் ஆர்த்தஸ்வரத்தைக் கேட்டு ஜடாயு என்னும் கழுகரசன் நடுவழியில் தோன்றி தசரதசக்ரவர்த்தியிடம் தனக்குள்ள தோழமைக்கிணங்க ஸீதையை விடுவிப்பதற்காக ராவணனுடன் கடும் போர் புரிந்தான். நெடுநேரம் போரிட்டு ராவணனின் தேர் முதலியவற்றுக்கு பங்கம் விளைவித்தான். கோபங்கொண்ட ராவணன் ஜடாயுவின் இறக்கைகளைக் கத்தியால் துண்டித்துவிட்டு லங்கைக்குச் சென்றுவிட்டான். சிறகு துண்டுபட்ட ஜடாயுவும் பூமியில் விழுந்து ஸ்ரீராமபத்ரனிடம் இச்செய்தியைத் தெரிவிப்பதற்காகவே சிரமத்துடன்

உயிர்த்திருந்தான். மாரீசனைக் கொன்றதும் ஸ்ரீராமபத்ரன் அவன் செய்த தீனக் குரலைக் கேட்டுப் பர்ணசாலையிலுள்ள ஸீதாலக்ஷ்மணர்கள் பதறுமலிருக்கவேண்டுமே என்ற எண்ணத்துடன்வேகமாக ஆச்ரமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். வழியில்எதிர்ப்பட்ட லக்ஷ்மணன் பிராட்டி கூறிய பருஷவாக்கியங்களால் தான் ஆச்ரமத்தைவிட்டு வர நேர்ந்தது என்பதை விஜ்ஞாபித்தான். இதைக் கேட்டதும் தனிமையிலுள்ள ஸீதைக்கு என்ன கெடுதி நேர்ந்ததோ என்று மனவருத்தம் கொண்டு வேகமாக ஆச்ரமத்தை யடைந்தான். அங்கு ஸீதையைக் காணுமல் மிக்க வருத்தமுற்று காடெல்லாம் தேடலானுன். அப்படித் தேடிக் கொண்டே வரும்போது வழியில் ஜடாயுவைக் கண்டான். தன் தமப்பன் தோழனுன ஜடாயுவையணுகி அவனுக்கு நேர்ந்த ஆபத்தின் காரணத்தை வினவினுன். ராவணன் மைதிலியை அபஹரித்துச் சென்றதையும் வழியில் ஸீதையை மீட்க ராவணனுடன் போரிட்டுத் தன் சிறகுகள் துண்டுபட்டு மரணத்தறுவாயில் தானிருப்பதையும் கூறி ஜடாயு ஸ்ரீராமபத்ரன் ஸமீபத்தில் உயிர் நீத்தான். தன் பித்ருதுல்யனுன ஜடாயுவுக்கு ஸ்ரீராமபத்ரன் முறைப்படி தஹநஸம்ஸ்காரம் செய்து நல்ல கதியளித்தான்.

(கரு) ஜடாயு ராவணனுடன் அதிக பராக்ரமத்துடன் போர் செய்தான் என்ற அழியாத கீர்த்தியைத் தன்னுயிரைக் கொடுத்து வாங்கிக் கொண்டான். அந்த ஜடாயுவின் சரீரத்திற்கு தஹநஸம்ஸ்காரத்தைப்பரிவுடன் செய்த ஸ்ரீராமபத்ரன் ஆச்ரிதர்களிடம் தனக்குள்ள தாக்ஷிண்ய குணத்தை, உதாரகுணத்தை வெளிப்படுத்தினுன். சிறு உதவி செய்த ஜடாயுவுக்கு மோக்ஷத்தை ஸ்ரீராமபத்ரன் அளித்தால் அவனுடைய ஔதார்யம் ஸ்பஷ்டமாகிறது. பரம ச்ரோத்ரியர்களுக்குச் செய்யவேண்டிய தஹநஸம்ஸ்காரம் முதலியவைகளை பக்ஷியினத்தைச் சேர்ந்த ஜடாயுவுக்குச் செய்தபடியால் ஸ்ரீராமபத்ரனின் ஸௌசீல்யகுணம் வ்யக்தமாகிறது என்றும் பெரியோர் பணிப்பர். ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைச்யன் ஆகியவர்களுக்கே சாஸ்திரங்களில் மந்திரபூர்வமான தஹநஸம்ஸ்காரம் விதிக்கப்பட்டிருக்க ஸ்ரீராமபத்ரன் திர்யக்ஜாதியான ஜடாயுவுக்கு அதே தஹநஸம்ஸ்காரத்தை செய்ததாக ஸ்ரீராமாயணத்தில் கூறப்பட்டிருப்பது எப்படிப் பொருந்துமெனில் ப்ரமாணங்களிற்சிறந்த ஸ்ரீமத்ராமாயணவசநபலத்தினுல் ஜடாயு என்னும் வ்யக்திவிசேஷவிஷயத்தில் அந்த ஸம்ஸ்காரம் உபபந்நமே என்று அங்கீகரிப்பது உசிதம். பகவத்பக்தியுள்ளவர்களுக்கு ஜாதி கிடையாதாகையால் பக்ஷிஜாதி நீங்கப்பெற்ற பரமபக்தனுன ஜடாயுவுக்கு மந்த்ரபூர்வமான தஹநஸம்ஸ்காரம் கூடுமென சிலர் கூறுவர். ஆனுல் பகவத்பக்தி யுள்ளவர்களுக்கு ஜாதி நீங்குமென்பதில் ஒரு ப்ரமாணமும் கிடையாதாகையால் இவர்களின் கூற்று ஆதரிக்கத்தக்கதன்று.

कल्पितविबुधभावकबन्धाभिनन्दित!

கல்பிதவிபுதபாவகபந்தாபிநந்தித!

(ப-ரை) கல்பித— ஸம்பாதிக்கப்பட்ட, விபுதபாவ— தேவரூபத்தையுடைய, கபந்த— கபந்தன் என்ற அஸுரனுல், அபிநந்தித— கொண்டாடப்பட்ட ஸ்ரீராமபத்ர!

(கரு) ராக்ஷஸஸ்வபாவத்தோடு காட்டில் வாழ்ந்த கபந்தன் என்ற அஸுரன் ஸ்ரீராமபத்ரன் செய்த அநுக்ரஹ விசேஷத்தினுல் தேவரூபம் அடைந்தான். தன்னிடம்

பேரருள் புரிந்த ஸ்ரீராமபத்ரனை மிக்க அபிநந்தநம் செய்தான். ஸ்ரீராமபத்ரனைப் பலவாறு துதித்து 'ஸமீபத்திலுள்ள ருச்யமூகமலையில் ஸுக்ரீவன் என்ற ஓர் வாநரவீரன் வஸிக்கிறான். அவன் துணை கொண்டு மைதிலியைத் தேடி வெற்றி பெறுவீராக என விண்ணப்பம் செய்து தன்னுடைய க்ருதஜ்ஞதையை வெளியிட்டான் என்பது 'அபிநந்தித' என்கிற பதத்தால் ஸூசிக்கப்படுகிறது. ஸ்ரீமத்ராமாயணத்தில் கூறப்படும் கபந்தன் வரலாறு வருமாறு:— ஒரு அஸுரன் தேவேந்திரனை எதிர்த்துப் போரிட்டான். கோபமுற்ற இந்திரன் வஜ்ராயுதத்தை உபயோகித்து அவ்வஸுரனின் தலையை அவனுடலுக்குள் மார்புக்குப் பின்புறமாகத் தள்ளிவிட்டான். அன்றுமுதல் அவனை கபந்தன் என யாவரும் அழைக்கலாயினர். அமரகோசத்தில் தலையில்லாத உடலே 'கபந்தம்' எனக் குறிப்பிட்டிருந்தாலும் பகவான் வால்மீகியின் அபிப்ராயப்படி 'ஸாதாரணமாக இருக்கவேண்டிய இடத்தில் இல்லாத தலையுள்ள உடலே கபந்தம்' என்று அங்கீகரிப்பதே உசிதமாகும். இந்த கபந்தன் ஸ்தூலசிரஸ் என்ற முனிவரிடம் அபசாரப்பட்டதால் அம்முனிவரிட்ட சாபத்தினால் ராக்ஷஸரூபத்தையடைந்தான். ஸ்ரீராமபத்ரன் ஆரண்ய ஸஞ்சாரகாலத்தில் உன்னிருப்பிடம் தோன்றி உன்னிரு கைகளையும் வெட்டி உன் சரீரத்தை எப்போது தஹிப்பானோ அப்போதே நீ சாபம் நீங்கப் பெறுவாய் என அம்முனிவரால் சாபவிமோசநம் குறிக்கப்பட்டிருந்தான். ஜடாயுவுக்கு தஹநஸம்ஸ்காரம் செய்துவிட்டு இளையபெருமாளோடு காடுதோறும் மைதிலியைத் தேடிவரும் ஸ்ரீராமபத்ரனை மலைப்பாம்புபோலிருக்கும் நீண்ட இரு கைகளாலும் நெருக்கி ஹிம்ஸிக்கத் தொடங்கினான். உடனே ஸ்ரீராமபத்ரன் அவன் கைகளைத் துண்டித்து விட்டார். அப்போது கபந்தன் 'தன்னுடலை ஓர் குழியில் தள்ளி விதிப்படி எரிக்கும்படி வேண்டிக்கொண்டான். ஸ்ரீராமபத்ரனும் பரமக்ருபையினால் அவன் கூறியவாறு செய்ய கபந்தன் திவ்யமான தேவரூபம் அடைந்துவிட்டான். தனக்குப் பேரருள் புரிந்த ஸ்ரீராமபத்ரனைக் கொண்டாடி ஸுக்ரீவமஹாராஜனுடன் தோழமை கொண்டால் ராக்ஷஸர்களையழித்து மைதிலியைப் பெற்று மகிழ்வீரென மொழிந்து ஸ்வர்க்கம் சென்றான். சாபம் பெறுவதற்கு முன் கபந்தன் கந்தர்வனாயிருந்தவன் என்றும் எப்போதும் அவன் ராக்ஷஸன் என்றும் சிலர் கூறியபோதிலும் 'கபந்தோ தாநவோத்தம:' என்றும் 'கௌ யுவாமிதி தாநவ:' என்றும் ஸ்ரீமத்ராமாயணவாக்யத்தையநுஸரித்து அவனை அஸுரன் என்று கொள்வதே உசிதமாகும். சாபத்திலிருந்து விடுதலை பெற்றவுடன் கபந்தனுக்கு அஸுரரூபம் வரவேண்டியிருக்க தேவரூபம் கிடைத்தது எப்படி எனில் ஸ்ரீராமபத்ரன் பரமக்ருபையுடன் செய்தருளிய தஹநஸம்ஸ்காரமஹிமையே தேவரூபத்தையளித்ததென உணர்க. இதையநுஸரித்தே நம் ஸ்வாமியும் 'ஸ்ரீராமபத்ரன் பரமக்ருபையினால் கபந்தனுக்கு தேவரூபத்தைக் கல்பித்தார் என ஸாதித்தருளினர். இதற்கு முன் இல்லாத ஒன்றை ப்ரகாசப்படுத்துவதே கல்பனை என்று கூறுவது உலக வழக்கு.

अवन्ध्यमहिममुनिजनभजनमुषितहृदयकलुषशबरीमोक्षसाक्षिभूत!

அவந்த்யமஹிமமுநிஜநபஜநமுஷிதஹ்ருதயகலுஷசபரீமோக்ஷஸாக்ஷிபூத!

(தொடரும்)

ஸ்ரீ:

"திறலனுமன் தெரிந்துரைத்த அடையாளம்"

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

8. மைத்தகுமா மலர்க்குழலாய்!
வைதேவீ! விண்ணப்பம்
ஒத்தபுகழ் வானரக்கோன்
உடனிருந்து நினைத்தேட
அத்தகுசீர் அயோத்தியர்கோன்
அடையாளம் இவை மொழிந்தான்
இத்தகையால் அடையாளம்
ஈதவன் கை மோதிரமே

[பொ-உரை] அஞ்ஜனம்போலும் இருண்டு விளங்குகிற மலர்களை அணிவதற்குரிய கூந்தலையுடையவளே! வைதேஹியே! அடியேன் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருள வேணும். பெருமாளோடு இன்பங்களில் ஒத்த மனத்தையுடையவன் என்ற கீர்த்தியையுடைய வானரவாசனான ஸுக்ரீவமஹாராஜன ராமபிரானோடு கூட இருந்து உம்மைத் தேடும்படி அடியேனிடம் விசேஷ அபிமானம் வைத்து, மிக்க சீரும் சிறப்பும் வாய்ந்த ஸ்ரீராமபிரான் இவ்வடையாளங்களை என்னிடத்திற் சொல்லியருளினன்; அன்றியும் இது அப்பிரான் திருக்கையில் அணிந்துகொள்ளும் மோதிரமாகும்.

[வி-உரை] பெருமாள் தேவரீரைப் பிரிந்த பின்பு ஊணும் உறக்கமும் அற்று, கடிந்ததும் வார்ந்ததும் அறியாதே, ஏதேனும் போக்யபதார்த்தத்தைக் கண்டால் உம்மையே நினைந்து புலம்பியும் இளையவரோடு உம்மைத் தேடிக்கொண்டுவரும்போது வழியில் ஸுக்ரீவ மஹாராஜரோடு அக்கினி ஸாக்ஷியாக ஸ்நேஹம் செய்து கொண்டு, அவ்விருவரும் ஒற்றுமை நயம் தோன்ற ஒருப்பட்டு, ஒவ்வொரு திக்குக்குப் பல கோடிக் கணக்கான வானரங்களை உம்மைத் தேடும்படி அனுப்பியிருக்கிறார்கள். அந்த ரீதியில் தெற்குத் திக்கில் வந்த அடியேனிடம் பெருமாளும் மஹாராஜரும் பூர்ணகடாக்ஷம் பண்ணி 'இவனாலே நமது கார்யம் கைகூடும்' என்று அபிமானித்துப் பெருமாள் இவ்வடையாளங்களைச் சொல்லியருளினர். அவற்றை அடியேன் தேவரீர் ஸந்நிதியில் விண்ணப்பம் பண்ணிக்கொண்டேன். அன்றியும், தமது நாமாங்கிதமான திருவாழியையும் அடியேனிடம் தந்திருக்கிறாரென்று அனுமான் அதனையும் காட்டித் தான் ராமதூதன் என்பதை வற்புறுத்தி அத்தேவியின் ஸந்தேஹத்தைப் போக்குகின்றான்.

'மீட்டுமுரை வேண்டுவன
வில்லையென மெய்ப்பேர்
தீட்டியது தீட்டறிய
செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனனே
நெடிய கையால்
காட்டினனொ ராழியது
வாணுதலி கண்டாள்

என்ற கம்பர் பாசுரம் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

* * * * * * * * * * * *

9. திக்கு நிறை புகழாளன்
தீவேள்விச் சென்ற நாள்
மிக்க பெருஞ் சபை நடுவே
வில்லிறுத்தான் மோதிரங்கண் (டு)
ஒக்குமா லடையாள
மனுமான்! என் றுச்சிமேல்
வைத்துக்கொண் டுகந்தனளால்
மலர்க் குழலாள் சீதையுமே

[பொ-உரை] திக்குகளிலே நிறைந்த புகழையுடையவனான ஜனகமஹாராஜனது, அக்னிகளைக்கொண்டு செய்யும் யாகத்தில் (விச்வாமித்ரமுனிவருடன்) போன காலத்திலே மிக்க பெரும் சபையின் மத்தியில் ருத்ரதனுஸ்ஸை

முறித்தவனான ஸ்ரீராமனுடைய மோதிரத்தைப் பார்த்து மலர்க் கூந்தலையுடைய பிராட்டியும், அனுமானே! உனது அடையாளங்களெல்லாம் சரியே' என்று சொல்லி அம்மோதிரத்தைச் சிரஸா வஹித்துக்கொண்டு மகிழ்ந்தாள்.

[வி-உரை] தத்வஜ்ஞானத்தாலும் வைராக்யத்தாலும் மோக்ஷேச்சையாலும் க்ஷுத்ரபலன்களைக் கருதாமல் கர்மாநுஷ்டானம் செய்ததாலும் பரப்பின புகழையுடையவன் ஜனகமஹாராஜன். அவனுடைய யஜ்ஞத்திற்குச் சென்ற விச்வாமித்ரனுடன் வந்த ஸ்ரீராமபிரான் கன்யாசுல்கமாகக் கல்பித்திருந்த சிவதனுஸ்ஸை 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்னும்படி எளிதில் முறித்த காலத்தில் அப்புருஷோத்தமன் கையில் இருந்தது ராம நாமாங்கிதமான அம்மோதிரம். பிறகு பாணிக்ரஹண காலத்தில் அது ஸீதையின் கைக்கு வந்தது. இராமனது பெயர் தீட்டப்பட்ட அம்மோதிரத்தை அனுமான் ஸீதைக்குக் காட்ட, கண்டு ஸந்தேஹம் தெளிந்த ஸீதை 'நீ முன்பு சொன்ன அடையாளங்களும் இந்தத் திருவாழியின் அடையாளமும் சரியே' என்று ஒப்புக்கொண்டு, அத்திருவாழியை வாங்கி கண்களிலும் சிரஸ்ஸிலும் வைத்து மகிழ்ந்து, பின்பு அதைக் கையிற் கொண்டு வைத்த கண் வாங்காமல் பார்க்க, அத்திருவாழியோடு சேர்ந்த விரலும், அதனோடு சேர்ந்த கையும், கையோடு சேர்ந்த திருமேனியும் ஜ்ஞாபகத்திற்கு வர, பெருமாளால் அலங்கரிக்கப்பட்டு ஒரு படுக்கையிலே இருந்தாற்போல் பிராட்டி உடல் பூரிக்கப் பெற்றாள் என்பது இப்பாசுரத்தில் கூறப்பட்ட விஷயம்.

ooo ooo ooo ooo

10. வாராரும் முலைமடவாள்
வைதேவி தனைக்கண்டு
சீராரும் திறலனுமன்
தெரிந்துரைத்த அடையாளம்
பாராரும் புகழ்ப் புதுவைப்
பட்டர்பிரான் பாடல் வல்லார்
ஏராரும் வைகுந்தத்
திமையவரோ டிருப்பாரே

[பொ-உரை] கச்சையணிந்த முலையையுடையவளும், மடப்பம் என்னும் குணமுடையவளும், விதேஹ வம்சத்தில் பிறந்தவளுமான பிராட்டியைப் பார்த்து, சிறந்த வல்லமையுடைய அனுமான் ஆராய்ந்து சொன்ன அடையாளங்களைக் கூறுகின்ற, பூமியில் நிரம்பின புகழையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த வித்வச் ச்ரேஷ்டரான பெரியாழ்வார் அருளிய பாசுரங்களைப் பயில்பவர்கள். எல்லா மங்களங்களும் நிரம்பிய ஸ்ரீவைகுண்டலோகத்தில் நித்யஸூரிகளோடு இருக்கப் பெறுவார்கள்.

பலச்ருதி

ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த வித்வச் ச்ரேஷ்டரான ஸ்ரீபெரியாழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட இப்பத்துப் பாசுரங்களையும் ஓதி உணர்ந்தவர். பரமபதத்தில் நித்யஸூரிகளின் திருவோலக்கத்தில் ஸ்ரீபகவானை நிரந்தரம் அநுபவிக்கப் பெறுவர்.

ஸ்ரீ:

சௌசம்

(சௌசம் அல்லது பாரிசுத்யம்)

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

'குர்யாச்சோணிததோஷேஷு ரக்தபித்த ஹரீம் க்ரியாம் | விரேகமுபவாஸம் ச த்விர்மா ஸஸ்யாஸ்ருகா ஹரேத் ||'

இந்த லங்கனம் என்பதுதான் உபவாஸம். மாதந்தோறும் ஒருமுறை அல்லது இருமுறை இவ்வுபவாஸத்தை அநுஷ்டித்தால் சோதநத்தினல் நீங்காத தோஷங்கள் இரத்தத்திலிருந்து விலகி உடற்கோளாறு சமநமாகும். (அலம்பிச்சுத்தம் செய்வது சோதநம்; உடலினுள் சேர்ந்த தோஷங்கள் லங்கநாதிகளால் தணிந்து விலகிவிடுவது சமநம்.) ஏகாதசிதோறும் உபவாஸம் இருத்தல் கொள்கையிலும் பலனிலும் இந்த லங்கநமுறையைச் சேர்ந்ததாகும்.

"இரத்தம் தூஷிக்கப்படுவதால் காணும் இரத்தபித்த வியாதியில் வாஸாஸ்வரஸம், கூஷ்மாண்டரஸாயநம் முதலியதை உட்கொண்டும், ஸிரையென்கிற காரிரத்தக் குழாயைக் கீண்டு ஓரளவு இரத்தத்தை வெளிப்படுத்தியும் (இம்முறை ஆயுர்வேதத்தில் ஸிராவ்யதை அல்லது ஸிராமோக்ஷணம் என்று வழங்கப்படும்.) தோஷபரிஹாரம் செய்வது வழக்கம். ஆனால் இப்பரிஹார முறையைவைத்தியருதவியில்லாமல் நிறைவேற்றிக்கொள்ள இயலாது. விரேசநம், வமநம், வஸ்தி இவற்றை அவசியமானபோது அவரவர்களே செய்துகொண்டு, இரத்தசுத்தியை நிறைவேற்றிக்கொள்ளலாம்"

முற்கூறிய முறைகளால் இரத்த தோஷம் நீங்கி உடல் சுத்தமாய் ஆரோக்கிய நிலைமையடைந்ததற்கான அறிகுறிகளையும் சரகர் இங்ஙனம் விளக்கியிருக்கிறார்:—

ப்ரஸன்னவர்ணேந்த்ரியமிந்த்ரியார்த்தாந் இச்சந்தமவ்யாஹத பக்திவேகம் | ஸுகாந்விதம் புஷ்டிபலோபபந்நம் விஶுத்தரக்தம் புருஷம் வதந்தி ||

"இரத்தம் மிகச் சுத்தமடைந்த மனிதனிடம் காணக்கூடிய குறிகளாவன:- உடலொளியும் புலன்களும் மிகத் தெளிவடைந்திருக்கும். ஒவ்வோர் இந்த்ரியமும் அததற்கு இலக்கான சப்தாதி விஷயத்தில் இயற்கைப்படி உணர்ச்சியைப் பெறும்; உண்ட உணவு தட்டுத்தடையின்றி ஜீர்ணமாய் உடனுக்குடனே உடலைப் போஷிக்கும்; ஆரோக்கிய ஸுகம் நன்கு ஏற்படும்; தேஹபுஷ்டியும் உடல் வன்மையும் ஓங்கியிருக்கும்; இவ்வனைத்தும் சுத்த ரத்தமுள்ள மனிதனிடம் காணக்கூடிய லக்ஷணமாகும்."

ச்வாஸாசய சுத்தி

முற்கூறிய விஷயங்களோடு ஆப்யந்தர தேஹசுத்தி முடிந்து விடவில்லை. "ச்வாஸம்" என்கிற இயற்கை வேலை ஒழுங்காக நடைபெறுவதும் ஆப்யந்தர சுத்திக்கு மிகவும் முக்கியமாகும். ச்வாஸ வேலையில் நாசியின் மூலமாய் உட்புறத்துக்கு சுத்த வாயுவை உறிஞ்சுவது "உச்சுவாஸம்" எனப்படும். புப்புஸங்களுக்குள் (ச்வாஸ கோசங்களுக்குள்) அடிக்கடியும் சேரும் அழுக்கடைந்த வாயுவை நாசியின் மூலமாகவே அவ்வப்பொழுது வெளிப்படுத்தும் வேலை "நிச்வாஸம்" என்று கூறப்படும். இவ்விதமாக நிமிஷந்தோறும் அநேக முறை அசுத்தவாயுவை வெளிப்படுத்துவதும்உடனே சுத்த வாயுவால் உட்புறத்தை நிறப்புவதும் ஆயுளுள்ள வரையில் (ஆஜந்ம-மரணம்) இயற்கையில் நிகழ்ந்து வருகின்றன. இவ்விரண்டு செயல்களுக்கும் சேர்ந்துதான் "ச்வாஸம்" என்று பொதுப்பெயர். இந்த ச்வாஸவேலைக்கும் ப்ராணாயாம முறைக்கும் வித்யாஸமில்லை.

உச்சுவாஸ நிச்வாஸங்களையே “பூரகம்” என்றும், “ரேசகம்” என்றும் முறையே வைதிக முறையில் வழங்குவார்கள். ச்வாஸாசயாதி ஆப்யந்த்தர அவயவங்களின் அழுக்குகளை வெளிப்படுத்தும் சௌசமுறை மிக்க அவச்யமென்பதைக் கருதியே, சௌசாசாரப் பிரகரணத்திலேயே ஸ்மிருதி கர்த்தாக்களும் பின்வரும் 'ப்ராணாநாயம்ய ஸம்ப்ரோக்ஷ்ய த்ய்ருசேநாப்தைவதேந து । ஜபந்நாஸீத' என்கிற பிராணாயாமம் செய்யவேண்டிய வகையையும் விதித்திருக்கிறார்கள்.

உச்சுவாஸ–நிச்வாஸக் கிரமத்தில்உட்கொள்ளப்படும் சுத்தவாயுவாலும், வெளிவிடப்படும் அசுத்தவாயுவாலும் சரீரத்தில் இரத்தம் சுத்தமாகும் வகையையும், இரத்தத்திலிருந்து தோஷம் வெளிப்படும் வகையையும், இதனால் (அதாவது பிராணாயாமக் கிரமத்தினால்) ஜாடராக்னி அபிவ்ருத்தியாகும் வகை முதலிய உபயோகங்களையும் சார்ங்கதரஸம்ஹிதை என்னும் ஆயுர்வேத நூல் இவ்வாறு விளக்கியிருக்கிறது:—

உரஸ்த: ப்ராணபவந: ஸ்ப்ருஷ்ட்வா ஹ்ருத்கமலாந்தரம் । கண்டாத் பஹிர் விநிர்யாதி பாதும் விஷ்ணுபதாம்ருதம் ॥ பீத்வா சாந்தர பீயூஷம் புநராயாதி வேகத: । சோதயந் தேஹமகிலம் ஜீவயந் சோணிதாநலம் ॥

இதில் 'உரஸ்த: ப்ராணபவந:' என்றால் மார்பறைக்குள் (புப்புஸங்களில்) சென்ற பிராணவாயு என்று பொருள். “விஷ்ணுபதாம்ருதம்” என்றால் ஆகாயத்திலுள்ள பிராணவாயு எனப் பொருள். “ஸ்ப்ருஷ்ட்வா ஹ்ருத்கமலாந்தரம்” என்றால் ஹ்ருதயம் என்னும் இரத்தாசய மூலமாய உடலெங்கும் வியாபிக்கும் இரத்தம் என்று பொருள். ஆகவே “ச்வாஸாசயத்தில் பரவிய சுத்த வாயு (பிராணவாயு) இருதயாவயவத்திற்குச் செல்லும் இரத்தத்தைப் பரிசித்து, அதைச் சுத்தம் செய்து விட்டு, தொண்டையின் வழியாக மீண்டும் பிராணவாயுவை ஆகாயத்திலிருந்து ஆகர்ஷிப்பதற்கு வெளி வந்து, அதை உறிஞ்சிக் கொண்டு வெகு துரிதமாக உரஸ் என்னும் மார்பறைக்குள் வந்து, இரத்தத்தை ஜீவசோணிதமாகச் செழிப்பித்து, உட்புற உடலைச் சுத்தமாக்கி, ஜாடராக்னியையும் உத்தீபநம் செய்கிறது.” என்பது அவ்வசநங்களின் தாத்பர்யம்.

மநஶ் ஶௌசம்

மனிதருக்கு மனம் அக்கழுக்கற்று அஹங்காரமமகார தோஷங்கள் நீங்கியிருந்தாலன்றி வெறும் தேஹசுத்தியினால் மாத்திரம் பயனொன்றுமில்லை. கோபம் முதலிய மனோவிகாரங்களும் இரத்த தோஷம் முதலிய விகாரங்களுக்குக் காரணமாகுமென்று முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். டாக்டர் இ. பி புட் (E.B. Foot) என்பவர் 'ப்ரிவென்ஷன் ஆப் டிஸீஸெஸ்' என்னும் நூலில் கோபம், பொறாமை, எரிச்சல், அவநம்பிக்கை, பகைமை ஆகியவை எவன் மனதில் எழுகின்றனவோ, எவன் இத்துர்குணங்களுக்கு வழக்கமாகவே தன் உள்ளத்தை வசப்படுத்துகின்றானோ, அவன் நரம்பு ஸம்பந்தமான வியாதிகளுக்கும் (வாதரோகங்கள்) இரத்த தோஷ ஸம்பந்தமான நோய்களுக்கும் ஆளாகிறான்' என்றும், ‘‘உத்ஸாஹமாகவும், அனைவரிடமும் அன்பு காட்டி சிரித்த முகத்துடனும், நிஷ்களங்கமான மனத்துடனும், தாராள நோக்கத்துடனும் இருந்து வருபவன் ஆரோக்கியசாலியாகவும், அனைவருடைய ஆதரவுக்கும் பாத்திரமாகவும் இருந்து இனிது வாழ்கிறான்” என்றும் பரிசுத்த மனோநிலைமையைப் பெரிதும் புகழ்ந்து கூறுகிறார். பொறாமை முதலிய மானஸிகமான மாலிங்யங்களை முற்றிலும் அகற்றி அனைவரிடமும் அன்பு காட்டி வந்ததாலேயே ஸ்ரீராமன் முதலிய புராண புருஷர்களைப் புனிதமானவரென்று இன்றும் போற்றிப் பூஜித்து வருகிறோம். மேனாட்டு சரித்திர வரலாற்றின்படியும் மனச்சுத்தியினாலேயே மனிதனுக்கு மேன்மையும் சிரேயஸ்ஸும் ஏற்படுகிறதென்பதற்குப் பல அத்தாட்சிகளுண்டு. 'வெகு நல்லவர்' ஆடம்பரமில்லாது அடக்கமும் அமைதியுமுடையவர், ஸத்யஸந்தர், மஹாதீரர், கடமையாயுள்ள காரியங்களைத் திறம்பட நிறைவேற்றுபவர், கபடு சூதுகளைக் கட்

டறவே வெறுப்பவர், மஹாதயாளு ஆகிய அருங்குணங்கள் நிரம்பி அமெரிக்காவுக்கு நிரந்தரமாக ஸ்வாதந்த்ரியத்தை வெற்றிகரமாகச் சம்பாதிக்து அளித்த ஜார்ஜ் வாஷிங்டன் என்பவர் அவ்வாறு அருங்குணங்கள் பெற்று சிரேயஸ்கரமாய் விளங்கியதற்கு அவர் ஒரு பொழுதும் சினத்தினுலும் பொருமையினுலும் தம் மனதைக் களங்கப்படுத்திக்கொண்டதில்லை என்கிற அவரது மாசற்ற மனோநிலைமைதான் முக்கிய காரணம்' என்பார்கள்.

மனதை அடக்கியாண்டு அதை ராகத்வேஷாதி தோஷங்களற்றதாய் வைப்பது ஆரோக்யத்திற்கு ஸாதகமாகும் என்கிற கொள்கையை நிரூபிக்க ஆயுர்வேதக்கிரந்தங்களிலிருந்து உதாஹரிக்கக்கூடிய பிரமாணங்கள் வெகுவாயுள்ளன. அர்த்தே தசமூலீயாத்யாயத்திலிருந்து அது ஸம்பந்தமாய் ஒரு வாக்யத்தை இங்கு குறிப்பிடுகிறேன் —

ஆத்மஹிதம் சிகீர்ஷதா ஸ்வாஸ்த்யமிச்சதா ஸத்வ்ருத்தமநுஷ்டேயம் | ஸத்யமேவ ப்ரூயாத்| கர்மஸ‍ு ஸர்வேஷ‍ு ஸம்யகவேக்ஷ்யாவேக்ஷ்ய ப்ரயதிதவ்யம் | ஸாமப்ரதாந: ப்ரசமகுணர்ச்சீ தர்மார்த்தகாமாந் பரஸ்பராநுபஹதாந் அநுபவேத் ராகத்வேஷாஹங்காராதீநாம் அவகாசம் ந மநஸி தத்யாத் | இஹ சாமுஷ்மிம்ச்ச போகே ச்ரேய: ஸாதகேஷ‍ு கர்மஸ‍ு அவதாநம் தர்யாத் | ஏவம் யோஹி நாம சஞ்சலம் மநோ ந கமயேத் தஸ்ய ஹிதமாயு: அந்யதா பவதி கேதவஹிதம்||

'பிராணிகளின் ஹிதத்திற்காகஆரோக்கியம் நிலைநிற்க விரும்புபவன் ஸத்யமே பேசவேண்டும்; எப்பொழுதும் அமைதியாய் அடங்கி நடக்கவேண்டும்; எதையும் பகுத்தறிந்து செய்யவேண்டும்; எதிலும் கவனக்குறைவாயிராமல் ஊக்கமாயிருந்து வரவேண்டும்; அறம் பொருள் இன்பங்களை ஒன்று மற்றென்றை பாதிக்காதபடி அநுபவித்துபயோகிக்கவேண்டும்; ஆசை பொருமை கர்வம் தற்பெருமை பகை இவற்றை முற்றிலும் அடக்கியாளவேண்டும்; இம்மை மறுமைகளுக்கான சிரேயஸ் என்னும் பேறு பெற நோக்கமுள்ளவனுயிருக்க வேண்டும்; முற்றிலும் மனஸ்ஸாக்ஷியுடன் நடந்து வரவேண்டும்; இவ்விதம் மனதைச் சுத்தமாய் அடக்கியாண்டு வருபவனுடைய உயிர் வாழ்க்கை ஹிதமானதாகும்; இவற்றிற்கு விரோதமாயுள்ள மனப்போக்கு அஹிதமானதாம்.' இது அவ்வாக்கியங்களின் கருத்து.

'ஸத்யத்தினுல் எற்படும் சௌசந்தான் மனச்சௌசமாகும்; இந்த்ரியங்களை யடக்கியாளும் திறமையும் மனச்சௌசத்தைச் சேர்ந்ததேயாம்; ஸர்வ ப்ராணிகளிடமும் இரக்கங்காட்டுந் தன்மையும் அவ்விதமே அருமையான சௌச முறையேயாம்; தண்ணீரால் உடலைக் கழுவி சுத்தம் செய்வது கடைசியாகக் கருதவேண்டிய ஐந்தாம் சௌசமுறையாம். ஆகவே மலாயதனங்களைக் கழுவுவதும், ஜலத்தில் குளிப்பதும் ஸாதாரண பாஹ்ய சௌசமென்றும், பொய், பொருமை முதலிய உள்ளழுக்குகளை அகற்றி மனதைச் சுத்தமாக வைத்துக் கொள்வதே அஸாதாரணமான ஆப்யந்தர சௌசமென்றும் கூறி மனச்சௌசத்தின் மஹிமை போற்றப்படுவதை அனைவரும் கவனிக்கவேண்டும்.

மனதின் சுத்தியே ஆரோக்யத்திற்கு ஆதாரமென்பதைப்பத்தி ஆயுர்வேதக் கிரந்தங்களிலிருந்து எடுத்துக் காட்டக்கூடிய பிரமாணங்கள் ஆயுர்வேதத்தில் அநேகம் உள; அவற்றை இங்கு நான் விளக்கி விஷயத்தை வளர்த்தப் போவதில்லை. காமம், க்ரோதம், மதம், மாத்ஸர்யம் என்னும் கச்மலகுணங்களுக்கு உறையிடமான உள்ளத்தைப் பெற்றவர்கள் உருவத்தில் (மேலுக்கு) சுத்தமாயிருப்பதாகத் தோற்றியபோதிலும், அவரவர்கள் ஜனஸமூஹத்திற்குத் தீராத தீமையிழைக்கும் தீண்டத்தகாத மனிதரென்றே மஹான்கள் கருதுகிறார்கள்.

'ஒழுக்காறுக் கொள்க ஒருவன் றன் நெஞ்சத்து அழுக்கா இலாத இயல்பு'

'மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்'

என்கிறார் திருவள்ளுவர். நமது தர்மசாஸ்திரம் கூறுவதும் அதுவே:

ஸத்யசௌசம் மநச்சௌசம் சௌசமிந்த்ரிய நிக்ரஹ: | ஸர்வபூததயா சௌசம் ஜலசௌசம் து பஞ்சமம் ||

‚ஸத்யமுறைப்பமே மேலான மநச்சுத்தியாம்; புலன்களை அடக்கியாளுவதும் மனதைப் பரிசுத்தமாக்கும் முறையாகும்; எல்லாப் பிராணிகளிடமும் இரக்கங் காட்டியொழுகும் பான்மையும் மனதைச் சுத்தமாக்குமாம். மனம் போன போக்கெல்லாம் போகாமலிருப்பதும் அதன் சுத்தியை மேலோங்கச் செய்வதாகும்; தண்ணீரில் மூழ்கி உடலை நிர்மலமாகச் செய்து கொள்வது ஐந்தாவதான (கடைசியிற் குறிப்பிடக்கூடிய) சௌசமுறையாகும்' என்பது இந்த ஸம்ஸ்க்ருத வசநத்தின் கருத்து.

க்ரோதேர்ஷ்யாவிஷயேச்சாதி: மாநஸோ மல உச்யதே | தேஷாமபோஹோ மநஸோ நைர்மல்யம் ஸமுதாஹ்ருதம் ||

என்கிற வசநத்தின்படி மனதை அசுத்தப் படுத்துபவை சினம், பொறாமை, பொச்சாப்பு சிற்றின்பப் பிற்று முதலியவையாம்; அவற்றைப் பற்றறவே ஒழித்து மனச் சாந்தி அடைந்து வாழ்வதே மனச்சுத்தியோடுள்ள இன்பவாழ்க்கையாகும். மனம் முற்றிலும் கபடு சூதின்றி களங்கமற்றுச் சுத்தமாயிருந்து வரும்வரையில் பகுத்தறிவுள்ள மேன்மக்கள் தற்காலம் தென்பளிக்கும் சொற்ப சுகங்களில் மனதைச் செலுத்தார்; பகுத்தறிவில்லாதவரோ முடிவில் இன்னலளிக்கும் விஷயங்களில் இன்பமெனக் கருதி ஈடுபட்டு இறுதியில் துன்பம் அனுபவிப்பர் என்று அடியில் வரும் வசநம் கூறுகிறது:—

ததாத்வமுபஸம்ஜ்ஞேஷு பாவேஷ்வஜ்ஞோ ऽநுரஜ்யதே | ரஜ்யதே ந து விஜ்ஞாதா நைர்மல்யாந்மநஸ்ஸ்தா ||

மாநஸசுத்திக்கான லக்ஷணங்களை பாவமிச்ரர் ஒரு பத்யத்தில் பரிஷ்காரமாக விளக்கி, கச்மலகுணம் படைத்த மனத்தினரை அடியில் வருமாறு மிகவும் இகழ்ந்து கூறுகிறார்:—

நாஸ்திக்யம் ஸுவிஷண்ணதாதிசயிதாலஸ்யம் ச துஷ்டா மதி: ப்ரீதிர்நிந்திதகர்மஸு வ்யவஹ்ருதிர்வ்யர்த்தாதிநித்ராலுதா | அஜ்ஞாநம் நியமாதிலங்கநமபோஜ்யாந்நாதர; க்ருத்ததா சித்தஸ்யாசுசிநோ ப்ருவந்தி தமஸா துஷ்டஸ்ய சைதாந் குணாந் ||

தாமஸகுணத்தினால் விகாரமடைந்த மனத்தைப் பெற்றவனிடம் நாஸ்திக்யக் கொள்கை, மிகவும் தீனத்தன்மை, மிகுதியான சோம்பல், துர்மதித்வம், சான்றோர் இகழும் செயல்களில் விருப்பம், வீணிற்பேசுதல், அதிநித்திரை அறிவின்மை, முறைதவறிய ஒழுக்கம், உண்ணத்தகாத அசுத்த உணவுகளில் விருப்பம், கடுங்கோபக் இத்துர்க்குணங்கள் குடிகொள்ளும் என்பது இப்பத்தியத்தின் கருத்து.

இவ்விதம் மலினமடைந்த மனத்தைச் சுத்தம் செய்து தனக்கும் தான் வாழும் உலகத்திற்கும் உபகாரமாயிருக்கவேண்டுமானால் அஹங்கார மமகாரங்களை அகற்றி, இன்பம் நேர்ந்தபோது அடங்காமகிழ்ச்சியையும், துன்பம் நேர்ந்தபோது தாங்கவியலாத அதைர்யத்தையும், அடையாது லோகஸேவைக்கும் ஈச்வரஸேவைக்குமே இப்பௌதிகசரீரம் படைத்திருக்கிறோமென்கிற பகுத்தறிவுடன் நாம் நடந்துவரவேண்டுமென்றும் ஆத்மசுத்தி அல்லது மனச்சுத்தியைப் பெற்று உஜ்ஜீவிக்க இதுதான் உபாயமென்று கீதாசார்யர் கூறிய அடியில் குறிக்கப்படும் வசநம் வைத்திய சாஸ்திர தத்துவத்தையும் நுட்பமாக உபதேசிக்கக் கூடியது:—

காயேந மநஸா புத்யா கேவலைரிந்த்ரியைரபி | யோகிந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்ம சுத்தயே || ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம் ||

இதைவிட வங்கஸேநர் மொழிந்துள்ள வசநம் அதிக தெளிவாகவும், தேஹ-மனோவிகாரங்களை விலக்குவதற்கு அவசியமான தத்துவங்களைக் குறிப்பதாகவும் உள்ளது. அது பின்வருமாறு:—

ரஜஸ்தமோதோஷவசாத் ப்ராப்தாம் சித்தஸ்ய வைக்ருதிம் | தர்ப்பாஹங்காரமாத்ஸர்யத்யாகேந ஸஹ ஸஜ்ஜநை: || ஸர்வதா வ்யவஹாரேண சாந்த்யாக்யஸலிலேந ச | ஸம்சோத்ய மாநஸம் க்லேசம் ஹரேச்சாரீரமப்யஸௌ ||

நாம் கண்கொண்டு பார்க்கும்போதே தேஹசுத்தியையும் தேஹத்தின் அசுத்தியையும் தெரிந்துகொள்ளக்கூடும். உள்ளம் என்கிற அந்தரங்கசுத்தியை விளங்கத் தெரிந்துகொள்வது எங்ஙனமென்பதை பாவமிச்ரர் வெகு ஸ்பஷ்டமாக ஒரு ச்லோகத்தில் விவரித்திருக்கிறார்.

ஆஸ்திக்யம் ப்ரவிபஜ்ய போஜநமநுத்தாபச்ச தத்யம் வசோ மேதா புத்தித்ருதி க்ஷமா ச கருணா ஜ்ஞாநம் ச நிர்தம்பதா | கர்மாநிந்திதமஸ்ப்ருஹா ச விநயோ தர்மாநபேதா மதிம் சேதே ஸத்வகுணாந்விதஸ்ய மநஸ: சுத்தஸ்ய ஸித்தா குணா: ||

இவ்வாறு பாஹ்யதேஹம், ஆப்யந்தரதேஹம், மனம் இவற்றின் சௌச முறைகளையும் சௌசத்தினால் உண்டாகும் உயர்ந்த நன்மைகளையும், அவ்வித பாரிசுத்யத்தினால் ஆஹ்நிக விதிகளுக்கேற்ற ஆசாரக்ரமங்களும் ஆயுர்வேத விதிகளுக்கேற்ற ஆரோக்யபரிபாலனங்களும் எவ்வாறு ஸித்திக்கும் என்பதையும் ஏற்ற ஆதாரங்களுடன் விளக்கினேன்.

மற்றொரு விஷயத்தை நாம் ஊன்றியுணர வேண்டும். இப்பொழுது தேசம் அவ்யவஸ்தை என்னும் ஆழங்காற்சேற்றில் ஆழ்ந்து உழலுகின்றது. இந்நிலையில் பாஹ்யசௌசத்தை நிகழ்த்தவே— அதிலும் வைதிகாசாரப்படி நிறைவேற்ற— இயலாதவராயிருந்து வருகிறோம். பிரக்ருதி பாசத்தினாலும் நவீந நாகரிகத்தாலான ஆடம்பரங்களாலும் ஆகர்ஷிக்கப்பெற்ற இவ்வுலகில் சுத்தமாயிருந்து மனம் தெளிவுறக் கருதி மேதினியெங்கும் அலைந்தோடித் தேடிப் பார்த்தாலும் மனதைச் சுத்தமாக்கும் சாந்தஸத்வம் அமையப் பெற்ற வஸதி சாலவும் அரிதாய்விட்டதாக

'பரிக்ராந்தா ப்ருத்வீ ப்ரணிதிபதமந்விஷ்ய பஹுதா கலிக்ஷோபக்ரஸ்தே ஜகதி ந கதி: க்வாபி ஸுலபா' என்று நிகமாந்தகுருவும் நிர்வேதத்துடன் ஆறு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பே நிலைமையின் சீர்கேட்டை நிரூபித்திருக்கிறார்.

அட்டசூலர்களென்கிற அந்நவிக்ரயக் கடைகள் அபரிமிதமாயேற்பட்டு, ஆஹாரநியமத்தையழித்துப்போட்டு ஆபாஸமான அசுசியைப் பரவச் செய்து வருகிறார்கள். சுத்தாசுத்தங்களுக்கும் ஸாத்விகதாமஸங்களுக்கும், தர்மாதர்மங்களுக்கும் தாரதம்யம் அறியமுடியாமல் தாறுமாறான நிலைமைகள் நாடெங்கும் தாண்டவமாடுகின்றன. தாமஸமென்கிற இருளடைந்த அவஸ்தையேற்பட்டு, அஸத்குணத்திற்கு ஆதிக்யம் தோன்றிவிட்டால், அந்நிலைமை இப்படித்தான் அனைத்தையும் அவ்யவஸ்தைக்கு ஈடுபடச் செய்யுமென்று காளிதாஸன் அநுபவபூர்வமாக வர்ணித்திருப்பது இங்கு பொருத்தமாயிருக்குமென்று குறிப்பிடுகிறேன்:—

'சுத்தமாவிலமவஸ்திதம் சலம் வக்ரமார்ஜவகுணாந்விதம் ச யத் | ஸர்வமேவ தமஸா ஸமீக்ருதம் திங்மஹத்வமஸதாம் ஹ்ருதாந்தரம் ||

அஸாத்விகர்களுக்கு இவ்விதம் ஆதிக்யம் ஏற்பட்டு, அரிய ஆசார-வ்யவஹாரங்களுக்கும் சாரீர-மாநஸிகசௌசக்ருத்யங்களுக்கும் ஹீநஸ்திதி நிகழ்ந்திருக்கும் இந்நிலைமையிலும் ஆசார-ஆரோக்யங்களுக்காதாரமான சௌசக்ருத்யங்களைக் கூடுமானவரையில் ஒழுங்காக நிகழ்த்த நோக்கமும் ஊக்கமும் உள்ள ஸத்குணசீலர்கள் பிறரது நடையுடை ஆசாரங்களையோ பிறர் கூறும் புகழ்ச்சி இகழ்ச்சிகளையோ சிறிதும் பொருட்படுத்தாது தமக்குத் தாமே ஸதாசாரஸம்பந்நர்களாயிருந்து, ஸாத்யமானவரையில் காய-வாங்-மனோதர்மங்களில் சுசியிருக்க முயல்வது இன்றைக்கும் இயலாத காரியமல்ல.

சுசித்வத்தைப்பற்றிய மற்றொரு விஷயமும் இங்கு கவனிக்கத்தக்கது. சுசியாக-ஆசாரசீலர்களாக இருக்க விரும்புபவர் ஆயாஸப்பட்டு இடந்தேடி ஓடியாடித் திரியவேண்டிய அவசியமில்லை. 'ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே' என்கிற கொள்கைப்படி

ஸ்நாதிகளால் தேஹசுத்தி செய்துகொள்வதோடு நில்லாமல் அறிவைச் சம்பாதித்து அந்தரங்கசுத்தியையும், சுத்தாஹார-விஹார-உபவாஸாதிகளால் ஆப்யந்தர (அந்தச்சரீர) சுத்தியையும் பெறுவதற்கு எவரும் எப்பொழுதும் எவ்விடத்திலும் முயற்சி செய்வது முடியாத காரியமல்ல.

ஸத்ஸம்பிரதாய தர்மங்களையும் கர்மாநுஷ்டாநங்களையும் பிரசாரம் செய்வதற்கான இப்பத்திரிகையில் ஆயுர்வேதக் கொள்கைகளுக்கிணங்க ஆத்யாத்மிக தத்துவங்களிலே ப்ரவ்ருத்தியுள்ள ஸ்ரீ வேதாந்ததேசிகனுடைய அரிய வசனத்தை எடுத்துரைத்து விஷயத்தை உபஸம்ஹாரம் செய்கிறேன்.

'சுத்தாசாரதபோதனைகநிரத: ப்ரஜ்ஞாநசைலாச்ரித: பத்மாகாந்தபதஸ்ப்ருஹாஸுரநதீநித்யாபிஷேகாஜ்ஜ்வல: । அத்யாத்மச்ருதி சிந்தநேந தபஸா நிர்தூத தோஷ: புமாந் கஸ்மை குத்ர கமிஷ்யதி ஸ்திதமிதம் கஸ்மை ச நிர்தேச்யதி ॥

தேஹ-மனோநிலைமைகளின் சுத்தியை விரும்பி நிஷ்களங்கமான ஆத்மஸ்வரூப தத்துவத்தையும் அறிந்து உலகில் உஜ்ஜீவிக்கக் கருத்துள்ளவன் அதற்கென்று இடந்தேடிக் கலந்தேடிச் செல்வதற்காகப் பெரு முயற்சி ஏதும் செய்யத் தேவையில்லை. அக்கழுக்கற்ற ஆசாரமாகும் ஆச்ரமத்திலே அமர்ந்திருந்து பேரறிவாகும் பர்வதத்திலும் பற்றுதலுடன் இருந்து, திருமாலின் திருவடித் தாமரைகளை விடுபவதற்கும், தேவகங்கையில் நித்தமும் நீராடி நிர்மலமான உடலோடும் உள்ளத்தோடும் பிரகாசிக்க, ஆத்யாத்மிகதத்துவங்களைச் சிந்தனை செய்து அவ்வித தபோமஹிமையினால் ஸகலதோஷங்களும் நீங்கியவனாய் இம்மையிலும் மறுமையிலும் இடையறாத இன்பமனுபவிக்கலாம்' இது தேஹாத்மசுத்திக்கும், அசுத்தியின் பயனுக்கும் உபாயங்கூறும் உத்தமமான உபதேசச் சுருக்கமாம்.

அட்டைப்பட விளக்கம்:-

அட்டையில் 'திருவிடவெந்தை' என்ற திருப்பதியில் கோயில்கொண்டுள்ள நித்யகல்யாணப்பெருமாள் ஸேவைஸாதிக்கிறார். கோமளவல்லி நாச்சியார், கல்யாணவிமானம், வராஹ கல்யாண தீர்த்தங்கள், மார்க்கண்டேடருக்கு ப்ரத்யக்ஷம், காலவரிஷியின் பெண்கள் 360 பேர்களையும் தினம் ஒருத்தியாகக் கல்யாணம் செய்துகொண்டபடியால் 'நித்யகல்யாணர்' ஆயினர். இந்த 360 பெண்களையும் சேர்த்து ஒருத்தியாக்கி 'அகிலவல்லிநாச்சியார்' என்று தமது இடது பக்கத்தில் வைத்திருப்பதால் இத்தலம் 'இடவெந்தை' ஆயிற்று. மூலவர் வராஹஸ்வரூபி. திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். இந்த ப்ளாக்கை நமக்குக்கொடுத்துதவிய பக்தன் ஆசிரியர் ஸ்ரீ அழகியசிங்காச்சாரியார் அவர்களுக்கு நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

P. K. R.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீ அழகியசிங்கர் வைகாசி மாதம் 24-உ புதன்கிழமை (6-6-56) ராத்திரி 10-மணிக்கு அஹோபிலத்திலிருந்து புறப்பட்டு 14- மைல் தூரமுள்ள அல்லகட்டா சத்திரத்திற்கு எழுந்தருளியாயிற்று. 7-7-56 அன்று ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 16- மைல் தூரமுள்ள கோவிந்தபள்ளி ஹநுமார் ஸந்நிதியில் எழுந்தருளியாயிற்று. ஷெ ஸந்நிதி ஆராதகர் நந்நிலம் ரங்கநாதய்யங்கார் பெருமாளுக்கு இடவசதி முதலிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்தார். 8-6-56 அன்று ராத்ரி அவ்விடமிருந்து புறப்பட்டு 10- மைல் தூரமுள்ள நந்தியாலுக்கு எழுந்தருளியாயிற்று. நந்தியாவில் தேஷ்பாண்டேயில் ஸேதுமாதராவ் பங்களாவில் பெருமாளும்கும்பகோணம் ஸ்ரீநாராயணய்யங்கார் குடியிருக்கும் க்ருஹத்தில் ஸ்ரீ அழகியசிஙகரும் எழுந்தருளியிருந்தாயிற்று. போகிகள் தங்களுடையஸௌகர்யத்திற்காகஒரு நாள் அங்கேஎழுந்தருளியிருக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்ததின்பேரில்9-6-56ம் அவ்விடமே எழுந்தருளியிருந்தாயிற்று. 10-6-56 ஞாயிறு ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 11- மைல் தூரமுள்ள பாணியம் வீரநாராயணப் பெருமாள் கோவிலில் எழுந்தருளியாயிற்று. 11-6-56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 14- மைல் தூரமுள்ள புக்கையில் உள்ள சத்திரத்தில் எழுந்தருளியாயிற்று. ஷெ ஸ்தலத்தில் கீழ் ஊற்றுள்ள இரண்டு புக்கைகளிலிருந்து ஜலம் ப்ரவஹிக்கிறது. தீர்த்தவஸதி ஸௌகர்யமாக இருந்தது. 12-6-56 செவ்வாய் ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 10- மைல் தூரமுள்ள நன்னூர் பங்களாவிற்கு எழுந்தருளியாயிற்று. அன்று ராத்திரியே அவ்விடமிருந்து புறப்படமுடியாமல் பலத்த மழை பெய்ததால் வியாழக்கிழமை பின்மாலை 6- மணிக்குப் புறப்பட்டு 8- மைல் தூரமுள்ள கர்னூல் ஹநுமார் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. அன்று (ஆனி மீ 1உ மாதப்பிறப்பு) காலை அவ்விடத்தில் எழுந்தருளியிருந்துவிட்டு மத்யாஹ்னம் இஜ்யை ஆகித் ததீயாராதனம் ஆனவுடன் துங்கபத்ராநதியைத் தாண்டி அக்கரையில் தண்டரப்பாடு கிராமத்தில் மாந்தோப்பு மண்டபத்தில் எழுந்தருளினர். முதல் நாள் நல்ல மழை பெய்திருந்தும் 'மார்க்கம் ததௌ ஸிந்துரிவ ச்ரிய: பதே:' என்கிற படியே யமுனை கண்ணனுக்கு வழி விட்டது போல் துங்கபத்ரையும் எங்குமுளனுக்கும் கண்ணனுக்கும் இரங்கித் தாண்டும்படியுள்ள ப்ரவாஹத்துடன் இருந்தது. பெருமாள் அக்கரைக்கு எழுந்தருளியபிறகு அன்று ராத்திரியே கொஞ்சம் அதிகமுள்ள ப்ரவாஹமாக ஆயிற்று. நதியைத் தாண்டுவதிலும் பிறகு மார்க்கத்திலுமுள்ள அஸௌகர்யத்தை உத்தேசித்து ரயிலில் அனுப்பக்கூடிய சாமான்களை ரயில்மூலம் கத்தவாலுக்கு அனுப்பப்பட்டது. மறுநாள் 15-6-56 ராத்திரி ப்ரவாஹம் கொஞ்சம் வடிந்தபிறகு வண்டிகள் எல்லாம் அக்கரை வந்து சேர்ந்தன. 16-6-56 மத்யாஹ்நம் இஜ்யாராதனம் ஆனவுடன் புறப்பட்டு ஸாயங்காலம் அங்கிருந்து 10- மைல் தூரமுள்ள சின்னபூதலப்பாடு சத்திரத்திற்கு எழுந்தருளியாயிற்று. 17-6-56 மத்யாஹ்நம் இஜ்யை ஆராதனம் ஆனவுடன் புறப்பட்டு 11- மைல் தூரமுள்ள உல்லூர் கோவிலில் எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து 18-6-56 மத்யாஹ்னம் புறப்பட்டு 14- மைல் உள்ள பூடூர் கோவிலுக்கு எழுந்தருளியாயிற்று. புறப்படும்பொழுது கொஞ்சம் மழை பெய்தது. மழை வலுவாகப் பெய்திருந்தால் அந்த வழி களிமண் பூமியாதலால் வண்டிகள் போக முடியாது. 19-6-56 பின்மாலை 5- மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 9- மணிக்கு 9-மைல் தூரமுள்ள கத்தவாலில் க்ருஷ்ணநதிதீரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அங்குள்ள ராஜாபங்களாவில் பெருமாள் எழுந்தருளியிருந்தார்.

சத்தவால் ஸமஸ்தானம் ஏற்பட்ட காலத்திலிருந்து காலஞ்சென்ற ராணிகாலம் வரையில் அந்த ஸமஸ்தானாதிபதிகள் ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்களாயும் ஸ்ரீஸந்நிதியில் விசேஷாபிமானம் உள்ளவர்களாயும் ஸந்நிதிக்கு வேண்டிய போகிகளையும் சிப்பாய்களையும் அப்போதைக்கப்போது அனுப்பிக்கொண்டும் சிப்பாய்களுக்குச் சம்பளங்கள் ஸமஸ்தானத்திலிருந்து அனுப்பிக்கொண்டும் வந்தார்கள். 27-வது பட்டம் ஸ்ரீவீரராகவவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் ஸஞ்சாரத்தில் காஞ்சீபுரத்திலிருந்து நேரே அஹோபிலத்திற்கு எழுந்தருளியாயிற்று. அப்போது நடந்த விருத்தாந்தத்தை ஸ்ரீஅழகியசிங்கர் அருளிச் செய்தாயிற்று.

அதாவது:— ஸ்ரீவீரராகவவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் இதற்கு 125- வருஷத்திற்கு முற்பட்ட கர ௵ வைகாசி ௴ காஞ்சீபுரம் வைகாசோத்ஸவத்திற்கு மங்களாசாஸனத்திற்காக எழுந்தருளின காலத்தில் அங்கு ப்ரஸித்தராயும் பூர்வாச்ரம ஜாமாதாவாயும் பருத்திப்பட்டு கனகம்மாவின் குமாரருமான பருத்திப்பட்டு ராஜகோபாலாச்சாரியாரை ப்ரதானராக வைத்து ஊரிலுள்ளவர்கள் ஸ்ரீஅழகியசிங்கரை எதிர்கொண்டுவந்து எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய் ஆராதித்தார்கள். அப்போது அந்த ராஜகோபாலாசாரியாருக்கு திடீரென்று உடம்புக்கு அஸ்வாஸ்த்யம் ஏற்பட்டது. அவர் அதிபால்யத்திலேயே சூராத்பாயியாயும் சாஸ்திரஜ்ஞராயும் நல்ல அநுஷ்டாதாவாயும், தர்சநீயராயும், ஸம்பந்நஸம்ருத்த குலத்தினராயும், ஸ்ரீஅழகியசிங்கர் பூர்வாச்ரம ஜாமாதாவாகவுமாக இருந்ததுடன் பாராயணாதிகோஷ்டியில் திலகமாயுமிருந்தபடியால் அபரிஹார்யமான த்ருஷ்டிதோஷம் ஏற்பட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள். உடம்புக்கு அதிகமான அஸௌகர்யம் ஏற்பட்டதால் அவருடைய ப்ரார்த்தனையின் பேரில் அவருக்கு உபாயாநுஷ்டானத்தைப்பண்ணிவிட்டு 'இதற்குத்தான் பெருமாள் இங்கு எழுந்தருளினார்போலும்' என்று ஸாதித்துவிட்டு மேற்கொண்டு அங்கு இருக்கத் திருவுள்ளமில்லாமல் உத்ஸவமத்தியிலேயே புறப்பட்டு ஸ்ரீஅஹோபிலம் யாத்திரையாக எழுந்தருளிவிட்டார். ஸ்ரீஅழகியசிங்கர் புறப்பட்டு எழுந்தருளினதும் இரண்டு தினங்களுக்கெல்லாம் ராஜகோபாலாச்சாரியார் பரமபதித்துவிட்டார். இந்த வ்ருத்தாந்தத்தை ஸ்ரீவீரராகவவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் குமாரத்தியான தம்முடைய தாயார்சொன்னதாக ஸ்ரீஅழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் தம்முடைய பிதா அருளிச்செய்ததாகவும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படியாக இருந்தது.

27-ம் பட்டம் ஸ்ரீவீரராகவவேதாந்தயதீந்த்ர மஹாதேசிகன் அஹோபிலத்தில் எழுந்தருளியிருந்தகாலத்தில் அப்போது இருந்த ஸமஸ்தானாதிபதி அஹோபிலம் நேரில் வந்து ஸ்ரீஅழகியசிங்கரை அந்த ஸமஸ்தானத்திற்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் விசேஷமாக ஆராதித்துக்கொண்டிருந்தான்.

'ஆயிரங்காதம் பறப்பதின் குட்டி ஐந்நூறு காதம் சிறகடிக்கொள்ளும்' என்றபடி 25-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் பெரிய ஸ்ரீநிவாஸமஹாதேசிகன் குமாரரும் 26-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கருமாகிய ஸ்ரீரங்கநாதமஹாதேசிகன் எழுந்தருளி இருந்தார். அந்த ஸ்ரீரங்கநாதமஹாதேசிகன் பூர்வாச்ரம குமாரரும் 27-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கருமாகிய ஸ்ரீவீரராகவவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் அந்த இரண்டு திருநாமங்களையும் அதிசயித்து எழுந்தருளியிருந்ததுடன் அநேக க்ரந்தங்களையும் செய்தருளி பரமதநிரஸநபூர்வகம் ஸ்வமதஸ்தாபனம்செய்தருளினார் என்று குருபரம்பரையில் கூறப்பட்டிருக்கிறது. 'சக்தே: பௌத்ரமகல்மஷம் பராசராத்மஜம்' என்றபடியும் 'ஶுகதாதம்' என்பதற்குப் பதிலாக 'ஶுகதாததாதம்' என்று சொல்லும்படி 38-வது பட்டம் திருக்குடந்தை ஸ்ரீஅழகியசிங்கரும் இந்த அழகியசிங்கருக்கு பௌத்ரராக எழுந்தருளியிருந்த பெருமை இந்த அழகியசிங்கருக்கு உள்ளது. இந்த காரணங்களினால் ஷை மூன்று அழகியசிங்கர்களை விக்ரஹரூபமாக ப்ரதிஷ்டை செய்திருக்கிறார்கள். சேர்ந்தாப்போல் மூன்று திருநாமங்களும் ஸேவை ஸாதிக்கிறார்கள். ஸமஸ்தானாதிபதி மிக

வும் ப்ரவணனுப் ஆராதித்துக்கொண்டு இருக்கச் செய்தேயும் காலகௌடில்யத்தால் ஸ்ரீ அழகியசிங்கர் ஆவணி மாதத்தில் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார். ராஜா மிசவும் சோகாக்ராந்தனுய் கதரி கிருஷ்ணு தீரத்தில் ப்ருந்தாவனத்தையமைத்து கைங்கர்யங்களையும் விசதமாகச் செய்தான். அந்த ப்ருந்தாவனக் கட்டிடத்தில் கம்பத்திலுள்ள பிம்பத்தைப் பார்த்தால் சோகாக்ராந்தனுகவே அந்த ராஜா தெரிகிறுன். பிறகு 2- வருஷகாலம் பெருமாள் அங்கேயே எழுந்தருளியிருந்து ராஜாவின் நிர்வாஹத்தில் பெருமாள் திருவாராதனம் நடந்தது.

அந்த ராஜா நாநா தேசங்களிலிருந்து வித்வான்களை வரவழைத்து வித்வத்ஸபை கூட்டி வித்வத்கோஷ்டியில் திலகமான திருக்குருங்குடி 28-ம் பட்டம் ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகனிடம ஆஸ்தானத்தை ஒப்புவித்தான்.

40-வது பட்டம் ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ரமஹாதேசிகனை அப்போதிருந்த ஸமஸ்தானுதிபதி சேர்ந்தாற்போல் மூன்று வருஷகாலம் ஆராதித்து திருவாபரணங்கள் தங்க டோலை தங்கப் பாத்திரங்கள் முதலியன பண்ணிவைத்தான். 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் காலத்தில் அப்பொழுதிருந்த ராணி ஸங்கல்பத்தை நடத்திவைத்து மூன்று மாஸகாலம் ஆராதித்தாள்

தற்கால அரசாங்கத்தில் ஸமஸ்தானங்கள் தன் மதிப்பை இழந்திருப்பதாலும் நாஸ்திக்யம் பரவி இருப்பதாலும் அம்மாதிரி பகவத்பக்தியும் ஆசார்யபக்தியும் இல்லாமல் இருந்தாலும் அதைக் கருதாமல் கிருஷ்ணையில் நீராடி ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவிக்கவேண்டும் என்கிற ஐகாந்தியத்தாலே நேரே கிருஷ்ணு நதீதீரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அன்று ஏகாதசியும் ஸ்வாதியுமாகையால் ப்ருந்தாவனத்திலிருந்து ஸ்ரீ அழகியசிங்கரை பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணி மங்களாசாஸனம் நடந்து பெரிய திருமஞ்சனமும் நடந்தது. மறுநாள் துவாதசி ஆராதனமும் ததீயாராதனமும் நடந்தபிறகு அங்கிருந்து புறப்பட்டு கத்தவால் மடத்திற்கு எழுந்தருளினுர். கத்தவால் மடத்தில் அன்று ஸாயங்காலம் பிரதோஷாராதனம் நடந்தது. மறுநாளும் அதற்கு மறுநாளும் 21&22-6-56 அங்கு எழுந்தருளியிருந்தார் 22உ கேட்டை திருநக்ஷத்திரம் நடந்தது. 22-6-56 ராத்திரி புறப்பட்டு 8- மைல் தூரத்திலுள்ள ஈரூருக்கு எழுந்தருளினுர். அவ்விடம் ஹநுமார் கோவிலில் எழுந்தருளியிருந்து 23-6-56 இஜ்யை ஆராதனமும் ததியாராதனமும் நடந்தபிறகு அங்கிருந்து புறப்பட்டு 12- மைல் தூரத்திலுள்ள நந்திண்ணே என்கிற ஊருக்கு ராத்திரி 8- மணிக்கு எழுந்தருளியாயிற்று. வரும்வழி ரொம்ப சிரமஸாத்யமாக இருந்தபடியால் வண்டிகளில் அநேகமும் பரிஜனங்களும் 24-6-56 காலையில் 8- மணிக்குத்தான் வந்து சேர்ந்தன. 24-6-56 முழுவதும் நந்திண்ணேயில் எழுந்தருளியிருந்துவிட்டு ராத்திரி 10-மணிக்குப்புறப்பட்டு 8-மைல் தூரத்திலுள்ள ராய்ச்சூருக்கு ராத்திரி 12- மணிக்கு எழுந்தருளினுர். ராய்ச்சூரில் ரயில்வேஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள பங்களாவிலெழுந்தருளினுர். 24-6-56 அன்று அவ்வூரிலுள்ள முக்ய கவர்ன்மென்ட் உத்யோகஸ்தர்கள், கலெக்டர்; தாசில்தார் டிஸ்டிரிக்ட் சூப்ரண்டெண்டாப் போலீஸ் முனிஸிபல் எக்ஸிகுடிவ் ஆபீஸர் முதலியவர்கள் வந்து பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் சேவித்துவிட்டு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்தார்கள். போகிகள் பிரார்த்தனையின் பேரில் அன்று அவ்வூரிலேயே எழுந்தருளியிருப்பதாகத் திருவுள்ளம்பற்றியாயிற்று. காற்றும் மழையும் ஆரம்பித்து விடாமலிருந்தபடியால் 27-ம் தேதி மத்யாஹ்னம் வரையில் ராய்ச்சூரிலேயே எழுந்தருளியிருந்தாயிற்று. 27-ந்தேதி மத்யாஹ்னம் மழை காற்று நின்றவுடன் 2-மணி சுமாருக்குப் புறப்பட்டு 16-மைல் தூரத்திலுள்ள குடிபுல்லூருக்கு எழுந்தருளி லக்ஷ்மிவெங்கடேசன் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்தாயிற்று. அவ்விடமிருந்து 28-ந் தேதி மத்யாஹ்னம் புறப்பட்டு 11- மைல் தூரத்திலுள்ள மக்தால் என்கிற ஊருக்கு

சாயங்காலம் 5- மணி சுமாருக்கு எழுந்தருளினார். அங்கு கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான விசாலமான கொட்டகையில் எழுந்தருளியிருந்தாயிற்று. 29-6-56 மத்யாஹ்னம் மப்புமந்தாரம் போட்டுக்கொண்டு பலமான காற்று மழையிருந்தபடியால் மழை நின்றவுடன் 2-மணிக்குப் புறப்பட்டு 16- மைல் தூரத்திலுள்ள மரிக்கானுக்கு 30-6-56 காலையில் 8-மணி சுமாருக்கு எழுந்தருளினார். வழியில் மழையும் இருந்துகொண்டிருந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 8- மைல் தூரத்திலுள்ள தேவர்கதிரா என்ற ஊருக்கு 1-7-56 எழுந்தருளினார். அன்று ராத்திரி அவ்வூரார் ப்ரார்த்தனைக்கிணங்க அவ்வூர் வீதிகள் வழியாக எழுந்தருளி நேராக 13-மைல் தூரத்திலுள்ள மாபூப்நகருக்கு 2-7-56 விடியற்காலை 4-மணி சுமாருக்கு எழுந்தருளினார். ராத்ரி கலெக்டர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸன் டோலோத்ஸவம் நடத்திவைத்தார். காற்றுமழையாயிருந்தபடியால் 3-7-56 கொஞ்சம் மழைவிட்டவுடன் மத்யாஹ்னம் 2-30 மணி சுமாருக்கு புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள ஜட்ஜர்லாவுக்கு ராத்திரி 9-மணிக்கு எழுந்தருளினார். வரும் வழியெல்லாம் கொஞ்சம் காற்றும் மழையும் இருந்துகொண்டேயிருந்தது. ஜட்ஜர்லாவில் ஒரு சத்திரத்தில் எழுந்தருளியிருந்தாயிற்று. அங்கிருந்து 4-7-56 சாயங்காலம் 4-மணிக்கு புறப்பட்டு 14- மைல் தூரத்திலுள்ள பாலாநகருக்கு ராத்திரி 9 மணிக்கு எழுந்தருளினார். மறுநாள் 5-7-56 துவாதசி ததீயாராதனம் நடந்தபிறகு 1-மணி சுமாருக்குப் புறப்பட்டு சாயங்காலம் 4-மணிக்கு 8-மைல் தூரத்திலுள்ள ஷாட்நகரில் வேணுகோபாலன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அங்கு ஸாயங்காலம் பிரதோஷ ஆராதனம் நடந்தது. மறுநாள் 6-7-56 அன்று ராத்திரி 9-மணிக்குப் புறப்பட்டு 11-மைல் தூரத்திலுள்ள பாலமக்கோல் என்கிற ஊரில் ஒரு பங்களாவுக்கெழுந்தருளினார். பாலமக்கோலிலிருந்து 7-7-56 ராத்திரி 10-மணிக்குப் புறப்பட்டு 7-மைல் தூரத்திலுள்ள ஷாம்ஷாபாத் (உம்தாநகர்) என்கிற ஊரில் உள்ள ஒரு பங்களாவில் எழுந்தருளி 8-7-56 அன்று மத்யாஹ்னம் அங்கிருந்து புறப்பட்டு 10-மைல் தூரத்திலுள்ள கிஷான்பாக் என்கிற இடத்திற்கு எழுந்தருளியாயிற்று. ராய்ச்சூரிலிருந்து ஷாட்நகர் வரும்வரையில் ஆங்காங்குள்ள கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களும் ஊரிலுள்ள பிரமுகர்களும் பூர்ணகும்பம் வாத்யங்களுடன் எதிர்கொண்டழைத்தனர். வேண்டிய ஸௌகர்யங்களையும் செய்து கொடுத்தனர். கிஷான்பாக்கிலுள்ள வேணுகோபாலன் ஸந்நிதி முன் அழகியசிங்கர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அபிமானிக்கப்பட்டதுமான ஸந்நிதி. மேற்படி ஸந்நிதியைப் பரிபாலித்துவரும் எண்டோர்மெண்டு கமிஷனர் திரியம்பகலால் அவர் சகோதரர்களும் தாயாரும் ரொம்ப ஆதரவுடன் ஸ்ரீ அழகியசிங்கரையும் பெருமாளையும் ஆராதித்தார்கள். ராத்திரி டோலோத்ஸவமும் செய்து வைத்தார்கள். ஸந்நிதிக்குப் பின்புறத்திலுள்ள விசாலமான மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். எல்லோருடைய பிரார்த்தனையின்பேரில் திருவுள்ளம் உகந்து மேற்படி ஸந்நிதியில் ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் உத்ஸவ விக்ரஹங்களை பிரதிஷ்டை செய்யத் திருவுள்ளம் பற்றியாயிற்று. ஏற்கனவேயுள்ள தேசிகன் விக்ரஹம் மிகவும் சின்ன மூர்த்தியாயிருந்தபடியால் உத்ஸவாதிகளை உத்தேசித்து கொஞ்சம் பெரிய மூர்த்தியாக பிரதிஷ்டை செய்யத் திருவுள்ளம்பற்றியாயிற்று. 11-7-56ல் பிரதிஷ்டை மிக விமரிசையாக நடந்தேறியது. அவ்விடத்தில் பிரதம மந்திரி கனம் ஸ்ரீ B. ராமகிருஷ்ணராவ் தம் குமாரன் ஸ்ரீ ரங்கநாதனுடனும் மற்றும் ஊரிலுள்ள பிரமுகர்கள் ஸ்ரீ N. நரஸிம்ஹ அய்யங்கார் ஸ்ரீ வீரராகவய்யங்கார் முதலானவர்களும் தண்டம் ஸமர்ப்பித்துவிட்டு 10-7-56 காலை 8- மணிக்கு பட்டணப்பிரவேசம் ஆகவேண்டுமென்று பிரார்த்தார்கள். அந்தப்படி 10-7-56 காலையில் அபிகமனாராதனம் பூர்த்தி செய்துகொண்டு அங்கிருந்து தங்கப் பல்லக்கில் பெருமாளுடன் புறப்பட்டு தந்தப் பல்லக்கில் பட்டணப்ரவேசமாக கியான்பாக்கிற்கு எழுந்தருளினார். பிரதமமந்திரியும்

ஊரிலுள்ள பிரமுகர் ஸ்ரீநரஸிம்ஹ அய்யங்கார், ஸ்ரீராமஸ்வாமி அய்யங்கார் இவர்கள் பூர்ண கும்பத்துடன் எதிர்கொண்டழைத்து அநுயாத்ரையாக வந்தார்கள். வழியில் மார்வாடிகள் அவரவர்கள் கிருஹங்கள்தோறும் விசேஷ ஸம்பாவனை செய்து ஆரத்தி எடுத்தார்கள்.

கியான்பாக் வந்ததும் ஸ்வாகத நிவேதனப் பத்திரிகை ஸ்ரீ. உ. வே. வித்வான். முத்ர கர்த்தா சிலுக்கூர் வெங்கடராகவாச்சாரியர் மூலம் ஐதராபாத் (பாக்யபுரி) நிவாஸிகள் சார்பில் விஜ்ஞாபிக்கப்பட்டது. சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தையும் இங்கேயே நடத்தவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். மேற்படி பத்திரிகை அச்சடித்து எல்லோருக்கும் ஒவ்வொரு பிரதி வழங்கப்பட்டது. கவர்ன்மெண்டு சார்பில் பிரதமமந்திரி விசேஷ உபஹாரங்களும், சால்வையும், 516-ரூபாய் ஸம்பாவனையும் செய்தார். அன்று ததீயாராதனம் தன்னுடையதாயிருக்கவேண்டுமென்று விஜ்ஞாபித்து மண்டபம் கட்டி விசேஷ ததீயாராதனத்தையும் அன்றிரவு டோலோத்ஸவத்தையும் நடத்திவைத்தார். 12-7-56 நியாயஸித்தாஞ்சனம் காலக்ஷேபம் முடிந்தது. 13-7-56 அன்று ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் உபக்ரமிக்கப்பட்டது. ஸஞ்சாரத்தில் இது மூன்றாவது பரிவர்த்தி. ஐதராபாத்வாஸிகளது பிரார்த்தனைப்படி அவ்விடத்திலேயே சாதுர்மாஸ்யஸங்கல்பத்தையும் நடத்துவதாகத் திருவுள்ளம் பற்றியாயிற்று. அத்துடன் முன்னமே தெரிவித்திருந்தபடி இனி மாலோலவித்வத் ஸதஸ்ஸை ஆடி மீ உத்திராடத்தில் ஆரம்பித்து நடத்துவதாகத் திருவுள்ளம் பற்றினபடி வித்வத்ஸதஸ்ஸையும் ஸங்கல்பத்திலிருந்து 10- நாள் அவ்விடமே நடத்துவதாகத் திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. இதுவரையில் நந்தந வருஷம் பங்குனி மீ 9-ந்தேதி(22-3-53)ஸஞ்சாரம் ஆரம்பித்ததிலிருந்து 4530- மைல்கள் ஸஞ்சாரம் நடந்திருக்கிறது. 4000- பேர்களுக்கு ஸமாச்ரயணமும் 2500- பேர்களுக்கு பரந்யாஸமும் நடந்திருக்கிறது. திருவுள்ளூரிலிருந்து புறப்பட்டு அஹோபிலத்தில் ஸங்கல்பம் நடந்த வரையில் 350- மைல்கள் ஸஞ்சாரம். அங்கிருந்து புறப்பட்டு துவரிமானில் நடந்தஸங்கல்பம் வரையில் 1350- மைல் ஸஞ்சாரம் நடந்திருக்கிறது. அங்கிருந்து புறப்பட்டு கெடுந்தெருவில் நடந்த ஸங்கல்பம் வரையில் 1100-மைல் ஸஞ்சாரம் நடந்திருக்கிறது. அங்கிருந்து ஐதராபாத் எழுந்தருளினவரையில் 1730- மைல் ஸஞ்சாரம் நடந்திருக்கிறது. ஆகமொத்தம் 4530- மைல் ஸஞ்சாரம் ஆகியிருக்கிறது.

(தொடரும்)

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற் கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு		ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 200—0—0
அரை வருஷத்திற்கு		ரூ 100—0—0
உள்பக்கங்களில்:	ஒரு பக்கம் ஒரு தடவைக்கு	ரூ 15—0—0
ஒரு வருஷத்திற்கு		ரூ 150—0—0
அரை வருஷத்திற்கு		ரூ 75—0—0

அரை, கால் பக்கங்களுக்கும், மற்றும் சலுகை விளம்பரங்களுக்கும், மற்ற நியமங்களுக்கும் மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, திருவள்ளூர் என்ற விலாஸத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸமஹாதேசிக வித்வத்ஸபா ஸ்ரீரங்கம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி விசேஷண விசிஷ்டராய் ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்வாமி என்று ப்ரஸித்தராயெழுந்தருளியிருந்த ஜ்ஞாந வைராக்யானுஷ்டானஸம்பந்ந ஸ்ரீநிவாஸமஹா தேசிகனின் வருஷாராதனம் துர்முகி ௵ ஐப்பசி௴ 2௳ (18–10–56) வியாழக்கிழமை சுக்லசதுர்தசியன்று நடைபெறும். அந்த ஸமயம் வழக்கம் போல் புரட்டாசி௴ 31௳ (16–10–56) செவ்வாயன்று 'ஸ்ரீ தத்வமுக்தா கலாப'த்திலும் 'ஸ்ரீமததிகாணஸாராவளி'யிலும் லேகந பரீக்ஷை நடத்தப்படும். ஸ்ரீ தத்வமுக்தாகலாபத்தில் 'ஜீவஸரம்' ஸம்பூர்ணமும், ஸ்ரீமததிகாணஸாராவளியில் மூன்றும் அத்தியாயம் பூர்ணமும் பரீக்ஷைக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமந் நிகமாந்தமஹா தேசிகன் ஸம்ப்ரதாயத்திலுள்ளவர்களே இந்தப் பரீக்ஷையில் அந்வயிக்கத் தக்கவர்கள்.

ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரம நிர்வாஹகர்களின் நியமனப்படி
சி. ர. ஸ்ரீநிவாஸபாட்ராசாரியன்.

தர்மோபநயனங்கள்

நாளது துர்முகி ௵ ஆனி௴ 30௳ வெள்ளிக்கிழமை (13-7–56) ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43–வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திவ்ய அநுக்ரஹத்தினால் ஸ்ரீரங்கம் அஹோபிலமடத்தில் 6 யஜுர்வேத ஸாமவேத வித்தியார்த்திகட்கு ஸ்ரீ ஸந்நிதிச் செலவில் தரும உபநயனங்கள் ஶாஸ்த்ரோக்தமாய் நடைபெற்றன. அவ்வமயம் ஸ்ரீமான்கள், M. B. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கௌசிக, நரஸிம்மய்யங்கார், A. V. தேசிகாசாரியர், ஸிம்லா, தேசிகாசாரியர், ரகுநாதஸ்வாமி ஐயங்கார் முதலான ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து முஹூர்த்தங்களை நடத்தி வைத்தனர்.

கடைசியில் ஸ்ரீமதழகியசிங்கரின் ஸம்பாவனைக்குப்பிறகு ஸ்ரீ. பொன்மலை, ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்ரீ அழகியசிங்கரின் பரந்த நோக்கத்தையும் ஸநாதன ஹிந்து மதாபிவிருத்திக்கான காரியங்களையும், அதற்கான பொருள் உதவியையும் எடுத்து விளக்கிப் பாடசாலையின் அபிவிருத்திக்காக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்துக் கொண்டும், பெற்றோர்களைத் தங்களது குழந்தைகளையும் இப் பாடசாலைக்கு அனுப்பிப் பயனடையும்படி கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

ராமதேசிகாசாரியார்,
உபாத்யாயர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஹைஸ்கூல், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் ப்ரதிஷ்டாமஹோத்ஸவம், ஸரிகொண்டா

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீ நியமனானுஸாரமாக 'ஸரிகொண்டா' ஸ்ரீவேணுகோபாலன் ஸந்நிதியில் துர்முகி ௵ வைகாசி௴ 1௳ முதல் 3௳ வரையில் ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன் மூலவ உத்ஸவமூர்த்திகளின் ப்ரதிஷ்டாமஹோத்ஸவம் அதிவிமரிசையாக நடந்தேறியது. வேத ப்ரபந்த க்ரந்தசதுஷ்டய பாராயணங்களும் விசேஷ ததீயாராதனமும் திருவீதி உத்ஸவமும் வெகு அழகாக நடைபெற்றன. ஸ்ரீ ஸந்நிதி ஸம்பாவனைகளும் பாராயணங்களில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு வஸ்த்ரங்களுடன் யதோசிதம் ஸம்பாவனையும் பண்ணப்பட்டு இம் மஹோத்ஸவம் ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹத்தினால் இனிது நடந்தேறியது. இம் மஹோத்ஸவத்தை ஸ்ரீ அழகியசிங்கர் சிஷ்யர்களான ஸரிகொண்டா, தர்மகர்த்தா, முத்ரகர்த்தா, ஸ்ரீ கோபாலாசாரியர் ராமசந்த்ராசாரியர், லக்ஷ்மீந்ருஸிம்ஹாசாரியர் நிகமாந்தரங்காசாரியர் முதலியவர்கள் நன்கு நடத்திவைத்தனர்.

மா. ப. ஸ்ரீநிவாஸாசாரியர், ஆராதகர்,
ஸ்ரீ அஹோபிலமடம், கத்வால்

ஸ்ரீ:

பக்ஷிண்யாசௌசநிர்ணயம்

பக்ஷிண்யாசௌசவிஷயே 'த்ரிகாலம்' இதி காலத்ரயம் ஸந்த்யேயம்। இரண்டு திவாக்குள்பட்ட ஒரு ராத்திரி, அல்லது இரண்டு இரவுக்குள்பட்ட ஒரு பகலாவது த்ரிகாலமென்றும் பக்ஷிணியென்றும் பர்யாயமாகச் சொல்லப்படுகிறது. இந்த விஷயம் வைத்யநாத தீக்ஷிதீயாசௌசகாண்டத்திலும், வைதிகஸார்வபௌமக்ருத ஆசௌசசதகத்திலும் கண்டுகொள்வது. காலமாவது:- ஸூர்யோதயம் முதல் நக்ஷத்ரதர்சனபர்யந்தமாவது, நக்ஷத்ரதர்சனம் முதல் ஸூர்யோதயம் வரையிலாவது. இதுவும் அந்த இரண்டு க்ரந்தங்களிலும் ஸ்பஷ்டம். சதகே – 'யஃ ப்ராக்ஸந்த்யாந்தராலே அஹனி யதி நிசி வா। ஸ ஸம்ஸ்ப்ருஷ்டே ஏககாலேந காலசேஷம் பஹிர்வஸது॥' தத்வ்யாக்யானே – 'பக்ஷஸ்ய அவிஜ்ஞாய ப்ராக்ஸந்த்யாந்தராலே, அஹனி, நிசி, ஸ ச தத்காலசேஷம் பஹிர்வஸது, திவா நிர்வர்த்யமானே ஸ்ப்ருஷ்டே ச்சேத்ராதயம், ராத்ராவாசேதுதயம் ப்ராக்ரோதாத் பஹிர்வஸது, ஏககாலேந – திவா பஹிர்வாஸே திவாசேஷேண, ராத்ரௌ பஹிர்வாஸே ராத்ரிசேஷேண ஸம்ஸ்ப்ருஷ்டி' இதி। இதனால் ஒரு பகல் மாத்திரம் ஒரு காலமென்றும், இரவு ஸூர்யோதயம் வரையில் ஒரு காலமென்றும் நிர்ணயிக்கப்பட்டது. 'ராத்ரௌ ஸூர்யோதயாத் பூர்வம் பஹிர்வஸேத்' இதி ஹரதத்தவசனேன ஸூர்யோதயம் வரையில் ஏககாலம் என்பது ஸித்தம். 'ஸ ஸம்ஸ்ப்ருஷ்டே ஏககாலேந காலசேஷம் பஹிர்வஸது' என்று நாம் ஸங்க்ரஹித்த ச்லோகத்துக்கு வ்யாக்யானத்தில் இந்த வசனங்களை ப்ரமாணமாக எடுத்திருப்பதால் பகல் முப்பது நாழிகை ஒரு காலம், இரவு முப்பது நாழிகை ஒரு காலமென்றும் தோழப்பருடைய ஸித்தாந்தம் ஸமீசீனமாக விளங்குகிறது. வைத்யநாததீக்ஷிதருக்கும் இந்தக் காலநிர்ணயம் இப்படியே என்று ஆசௌசகாண்டத்தில் ஸபிண்டாசௌசநிரூபணத்தில் காலநிர்ணயத்துக்காக இந்த ஸார்வபௌமஸங்க்ரஹ ச்லோகத்தையும் தத்வ்யாக்யானத்திலுள்ள ஹரதத்தவசனங்களையும் அப்படியே உதாஹரித்திருப்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. இப்படி பக்ஷிணீசப்தத்தை காலத்ரயபரமாக இருவரும் சொல்லியிருப்பதால் 'த்ரியாமாயாஸ்த்ருதீயாம்சே யதி ஜந்தோர்ம்ருதிர்பவேத்। ப்ராதராதி யதி த்வம்சே ஸூர்யோதயாத்ருதிஷ்டதே' என்கிற ஸங்க்ரஹந்யாயம் இதில் ப்ரவ்ருத்தியாது. அதில் ஸூர்யோதயமென்றும் ப்ராதராதியென்று உதயாதிநம் முதல் என்றும் திநாசௌசவ்யவஸ்தாபகம். காலத்தைக்கொண்டு ஏககாலம் காலத்ரயமென்கிறதெல்லாம் ஸூர்யோதயாத்ருஷ்டநபர்யந்தம் ஒரு காலம்; அஸ்தமயமுதல் ஸூர்யோதயபர்யந்தமே ஒரு காலமென்றே கொள்ளவேணும். இரவில் பதினெட்டேமுக்கால் நாழிகைக்கு மேல் மரணம் நேரிட்டாலும் ஸூர்யோதயத்துடன் ஒரு காலமாகிவிட்டது. பின்பு திவாவும் ராத்திரியும் கழிந்தால் காலத்ரயாத்மகபக்ஷிணீ ஸம்பூர்த்தியாகிவிட்டது. ஸாயம் ஒரு நாழிகைப் போதுக்கு நேர்ந்தால் எப்படி அஹச்சேஷேண ஒரு காலம் கடந்துவிட்டதோ, அப்படியே இரவில் ஸூர்யோதயத்துக்குள் நேர்ந்தாலும் ஸூர்யோதயத்துடன் ஒரு காலம் கடந்துவிட்டது என்று ப்ராமாணிகஹ்ருதயஜ்ஞம். இதுவிஷயத்தில் இதுவே பர்யாப்தம்.

இதம் – ஸ்ரீ ஸ்ரீராகவாசார்யவாஸீ, ஹரிதவம்ஸம், தி. எச்சம்பாடி. ஸ்ரீநிவாஸதாஸஃ.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ஸ்ரீ தக்ஷிணாயனம்- க்ரீஷ்ம ருது - கர்க்கடகமீ 1956 ஜுலை - ஆகஸ்டுமீ]

16-7-56 ஆடிமீ 1உ திங்கட்கிழமை சூன்ய திதி
17-7-56 2உ செவ்வாய்க்கிழமை சூன்ய திதி
18-7-56 3உ புதன்கிழமை ஏகாதசி. (சயன ஏகாதசி)
22-7-56 7உ ஞாயிற்றுக்கிழமை பூர்ணிமை; சாதுர்மாஸ்யஸங்கல்பம்; உத்திராடம்; ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்ரம்; 16-வது வார்ஷிக ஸ்ரீ மாலோல வித்வத்ஸதஸ் ஆரம்பம்.
24-7-56 9உ செவ்வாய்க்கிழமை ருக்ப்ரதமோபாகர்மா.
3-8-56 19உ வெள்ளிக்கிழமை ஏகாதசி வ்ரதம்.
5-8-56 21உ ஞாயிற்றுக்கிழமை போதாயந அமாவாஸ்யை.
6-8-56 22உ திங்கட்கிழமை ●அமாவாஸ்யை. புஷ்யம் 36-வது பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
7-8-56 23உ செவ்வாய்க்கிழமை ப்ரதமை -த்விதீயை திதித்வயம்.
8-8-56 24உ புதன்கிழமை த்ருதீயை திதி. திருவாடிப்பூரம், ஆண்டாள்; 26-வது பட்டம் ஸ்ரீரங்கநாதயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
12-8-56 28உ ஞாயிற்றுக்கிழமை ஸ்வாதி; 25-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
14-8-56 30உ செவ்வாய்க்கிழமை கடகசுக்லநவமி திதி.
15-8-56 31உ புதன்கிழமை தசமி திதி.

[தக்ஷிணாயனம் வர்ஷருது ஸிம்ஹமீ]

16-8-56 ஆவணிமீ 1உ வியாழக்கிழமை ஸிம்மரவி 24-34 விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
17-8-56 2உ வெள்ளிக்கிழமை ஏகாதசி வ்ரதம். த்வாதசி திதி.
18-8-56 3உ சனிக்கிழமை த்ரயோதசி திதி.
19-8-56 4உ ஞாயிற்றுக்கிழமை அதிதி
21-8-56 6உ செவ்வாய்க்கிழமை ○பூர்ணிமை யஜுருபாகர்மா.
22-8-56 7உ புதன்கிழமை காயத்ரீஜபம்.
28-8-56 13உ செவ்வாய்க்கிழமை வைகாஸ ஸ்ரீஜயந்தீ.
29-8-56 14உ புதன்கிழமை முநித்ரய, பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தீ.
30-8-56 15உ வியாழக்கிழமை நவமி-தசமி திதித்வயம்.
31-8-56 16உ வெள்ளிக்கிழமை ஏகாதசி திதி.

ஸ்ரீ அஹோபிலமடத்தில் ப்ரசுரமாகும் வெளியீடுகள் எல்லாம் சென்னையில் அடியிற்கண்ட விலாஸத்தில் விற்பனைக்குக் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ. M. கிருஷ்ணமாசாரியர், பேபர் மர்சண்ட், மஹாலக்ஷ்மி தெரு, தி. நகர். சென்னை-17.

முக்கிய அறிவிப்பு

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை அடியிற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷ விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்ருகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ்கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

पादुकासहस्रम्

ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம்

நாகரலிபியில் மூலமும் தமிழில் பிரதிபதார்த்த தாத்பர்யங்களும்
(பதவுரை பொழிப்புரை) சேர்ந்து 1956 ஹூ ஆகஸ்டு முதல்
10 மாதத்தில் 10 ஸஞ்சிகையாக வெளிவரும்.

உரையாசிரியர்:–
மீமாம்ஸாகேஸரி, மீமாம்ஸார்ணவ, பண்டிதராஜ, ஸாஹித்யஸாகர,
ஸ்ரீ. உ. வே. D. T. தாதாசார்யஸ்வாமி, M. O. L.

ஜூலை 31-ஆம் தேதிக்குள் முன்பணம் ஒரு ரூபாய் அனுப்பி தம் பெயரைப் பதிவு செய்து கொள்ளுமவர்களுக்கு மட்டும் தபால் செலவு உள்பட
சலுகை விலை ரூ. 10—0—0
(பிறகு பொதுவான விலை ரூ. 15—0—0. தபால் செலவு தனி)
உங்கள் பெயரை உடனே பதிவு செய்துகொள்ள முந்துங்கள்.
மற்ற விபரங்களுக்கு விசாரிக்க:—

ஸ ர ஸ க லா நி லை ய ம்

சமயநூல் பிரசுரகர்த்தர் & விற்பனையாளர்

P. B. No. 619. தெற்குமாடவீதி, : : சென்னை-4.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:



ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

அநேகமான தண்டம் ஸமர்ப்பித்த விஜ்ஞாபநம். ஸ்ரீ ஸந்நிதி நித்ய ததீயாராதந வேதாந்த க்ரந்த காலக்ஷேபங்களெல்லாம் ஹைதராபாத் கியான்பாக்கில் ஸுகமாய் நடந்து வருகிறது.

ஸ்ரீ அஹோபிலமடம் லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமி ஸந்நிதியில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் [illegible] ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகனின் சாதுர்மாஸ்யஸங்கல்பமஹோத்ஸவம் நாளது துர்முகி வருஷம் ஆடி மீ 7உ (22-7-56) ஞாயிற்றுக்கிழமை தினம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் க்ருபையை முன்னிட்டு ஹைதராபாத் கியான்பாக்கில் நடத்துவதாக ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றியாகியிருக்கிறது.

முன் தெரிவித்திருக்கிறபடி இனி ஆடிமாதத்திலேயே உத்திராட நக்ஷத்திரத்தில் "ஸ்ரீ மாலோலவித்வத்ஸதஸ்" நடத்துவதாகத் திருவுள்ளம்பற்றியாகியிருக்கிறபடியால் 16-வது வார்ஷிக ஸ்ரீமாலோலவித்வத்ஸதஸ்ஸும் அன்றே உபக்ரமித்து 10 நாட்களும் அவ்விடத்திலேயே நடத்துவதாகத் திருவுள்ளம்பற்றியாகியிருக்கிறது.

ஆஸ்திகர்களும் வித்வான்களும் எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸேவித்துக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தையும் மந்த்ராக்ஷதைகளையும் பெற்றுக்கொள்ளவேணும்.

இந்தப்படி ஸ்ரீ நியமனம்,

நையார், ஜோஸ்யம், மாடபூஷி, ரங்காசாரியர்.

ஸ்ரீகார்யம்